வள்ளலார் வழிக்கதைகள்

ஆசிரியர் :

திருப்பெருந்துறைப் புலவர்

அடியன் மணிவாசகன்

கழக வெளியீடு

கழக வெளியீடு: க௭௬௪

வள்ளலார் வழிக்கதைகள்

★

ஆசிரியர் :

திருப்பெருந்துறைப் புலவர்

அடியன் மணிவாசகன்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1975

அடியன் மணிவாசகன் (1936)

Branches:

Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam. Tiruchirappalli-2.

Ed 1 June 1975

VALLALAR VAZHIK KATHAIKAL

Appar Achakam, Madras-1. (1/1)

பதிப்புரை

பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தோன்றிய அருளாளர்களுள் வள்ளலார் இராமலிங்க அடிகள் தலையாயவரெனலாம். ஏனெனில் அவர் பாடிய அருட் பாடல்களும் வழங்கிய நீதி உரைகளும் உலகுயிர்கள் அனைத்தும் உய்யும் வழி காட்டுவனவாகும். இற்றை நாள் உலகெங்கும் உரத்த குரலில் பேசப்படும் பொதுநிலை (Socialism) பற்றிய கருத்துகளை நூறு ஆண்டுகட்கு முன்னரே மக்களிடம் பரப்பியவர் வள்ளலார் ஆவர்.

உலகில் காணப்படும் இல்லாமை, கல்லாமை, அறியாமைகளைக் கண்டு வருந்தி அவற்றைப் போக்க அருட்பாக்களைப் பொழிந்து இறைவனை வேண்டினுர் அடிகள். உண்மையான இறையன்பைப் பரப்பினுர். ஒழுக்கத்தை வலியுறுத்தினுர்.

வள்ளலாரின் அருட்பாடல்கள் பல அரிய கருத்துகளை உள்ளடக்கியுள்ளன. அவற்றை இளைஞர்கள் அறிந்து, படித்துப் பயன் கொள்ளுமாறு செய்யும் கருத்துடன் "வள்ளலார் வழிக்கதைகள்" என்னும் இந்நூலினைக் கதைப் போக்கில் இனிய எளிய தமிழில் எழுதியுள்ளார் இந் நூலாசிரியர். அன்னுருக்குக் கழகத்தின் நன்றி என்றும் உரித்தாகும்.

இளைஞர்கள் அன்பு, அறிவு, அருள் ஆற்றல்களைப் பெறத் துணைபுரியும் இந்நூல் பள்ளி, கல்லூரி, பொது நூலகங்களில் இடம் பெறுமாயின் நாடு நலம்பெறும் என்பதில் ஐயமில்லை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

வள்ளற்பெருமானை நினைக்கும்பொழுதெல்லாம் என் நெஞ்சம் ஊறுகிறது; கண்ணீர் வழிகின்றது. யாருக்குத் தான் அந்த உருக்கம் வராது? இரக்கமே உருவான அப் பெருமான் ஓரறிவு உயிராகிய பயிரின் வாட்டத்தைக் கண்டு வாடி வருந்தினாரே அதை நம்மால் மறக்க வியலுமா! அவரைப்போல் வருந்தியவர் உலகில் வேறு யாரே உளர்? ஆண்டவனிடத்திலே இந்த உலகத்திற்காக அழுது முறையிட்டு அருள்பெற்றவரன்றோ அவர்?

வடலூரிலே அப் பெருமான் அருளற நிலையங்களை நிறுவி நிகழ்த்திய வியத்தகு செயல்கள்தாம் எத்தனை! அவர் கண்ட தெய்வப் பொதுநெறி உலகத்தையே கவர்ந்து ஈர்க்கக்கூடியதல்லவா!

அவற்றையெல்லாம் இளைஞருலகம் — குறிப்பாக மாணவர்கள் தெரிந்துகொண்டு உள்ளத்தைப் பண்படுத்தி வாழ்வாங்கு வாழவேண்டிய காலம் இதுவாதலால் இந் நூலினை எழுதினேன். எளிமை நோக்கிச் சிறுகதை நடையிலே அமைத்தேன். இளைஞர்கள் படித்து அருட் பண்பைப்பெற்று ஆருயிர்களிடத்தில் இரக்கங்காட்ட வேண்டுகின்றேன்; உயர்வு தாழ்வற்ற மனிதவுலகை மன ஒருமைப்பாட்டால் உருவாக்க வேண்டுகின்றேன்.

'வள்ளலார் வழிக்கதைகள்' என்னும் இதனைப் படைக்கத் தூண்டி, வெளியிட விழைந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைத்திரு. வ. சுப்பையா அவர்கட்கு என் நன்றியினைக் கூறிக் கொள்கிறேன்.

ஆசிரியன்

உள்ளுறை

வள்ளலார் திருவாக்கு

"உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினுல் அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் காலம் உள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்."

"நல்வினை என்பது உயிர்களிடத்து அருளுடைமை என்றும்; தீவினை என்பது உயிர்களிடத்து அருளில்லாமை என்றும் அறியப்படும்."

"உயிர்களிடத்தில் இரக்கம் இல்லையானுல் இவ்வுலக ஒழுக்கம் எவ்வளவும் சிறப்படைய மாட்டாது."

"கொலை, சினம், சோம்பல், பொய், பொருமை, கடுஞ்சொல் முதலியவற்றை அறவே நீக்குதல் வேண்டும்."

"புண்ணியம் என்பது தொடக்கத்தில் செய்வதற்கும், அனுபவித்தற்கும் முயல்வதற்கும் துக்கமாயும் பின் சுகமாயும் விளங்கும்."

"பாவமென்பது தொடக்கத்தில் செய்வதற்கு இன்பம் போன்றும் பின் துன்பமாகவும் இருக்கும்."

"புகைக்குடி, கஞ்சாக்குடி, கட்குடி, சாராயக் குடி முதலிய மயக்கக் குடிகள் கூடா."

"எந்த வேலை செய்யினும், எந்த விவகாரம் செய்யினும் சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்."



இராமலிங்க வள்ளலார்

வள்ளலார் வழிக்கதைகள்

1. வந்த வழி

அன்று காலை ஆறுமணியிருக்கும். குளித்துமுடித்து அம்பலவாணர் வழிபாட்டு அறைக்கு வந்தார்.

கூடையிலிருந்த வண்ணமலரை எடுத்துத் தம் எண்ணம் நிறைய இறைவன் திருமேனியிலே தூவினார். மலர்மணமும் ஊதுவத்தி மணமும் போட்டிபோட்டுக் கொண்டு வீட்டிலுள்ளவர்களையெல்லாம் துயிலெழுப்பின. உள்ளமுருகிக் கண்ணீர் பெருக வழிபட்ட தந்தையின் வாயோ எதையோ சுவைத்துத் தின்பதுபோல (அசை போட்டபடி) அருட்பாவைப் பாடியது. அந்த ஒலி மெல்லவே வந்தது. என்றாலும் தெய்வ அன்பின் கூர்மையைக் காட்டியது.

வழக்கம்போல அருட்பா இசையைக் கேட்டுப் பழகிய பெரியமகன் அரசுவின் செவிகளுக்கு அப்பொழுது என்றுமில்லாத இன்பம் ஏற்பட்டது. திடீரென விழித்துக் கொண்ட அவன் தலையணையை நோகும்படி தூக்கிப் போட்டுவிட்டு எழுந்தான்.

"அடே, அரசு! இன்னுமா தூங்குகிறாய்?" என்று தந்தை கூப்பிடும் நேரமும் அவனெழுந்த நேரமும் ஒத்திருந்தன. பாட நூல்களை அள்ளிக்கொண்டு முன் கூடத்திற்கு வந்தான் படிப்பதற்காக. அம்பலவாணரும் அங்கு வந்து அமர்ந்தார் ஒரு நாற்காலியில். சுடச்சுடக்

கமழும் சுவைநீரைக் கொண்டுவந்து அவர் கையிலே கொடுத்துவிட்டு நகர்ந்தாள் அவர் மனைவி கோமதியம்மாள்.

சுவைநீரைப் பருகியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்த தந்தை, பாடம் படித்துக்கொண்டிருந்த அரசுவைப் பார்த்துக் கேட்டார் :

"அப்பா! அரசே! நம் நாட்டிலே பிறந்து அருள் மழை பொழிந்து சென்ற அருளாளர்களைப்பற்றி நீ அறிந்து வைத்துள்ளாயா?"

இதைக் கேட்ட அரசுவின் முகம் மலர்ந்தது. ஆர்வத்துடன் சொன்னான் :

"ஓ, அறிந்துள்ளேனே! எங்கள் ஆசிரியர் எத்தனையோ அருளாளர்களின் கதைகளைச் சொல்லியிருக்கிறார். மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருமங்கை மன்னர், திருஞானசம்பந்தர், நம்மாழ்வார், நம்பியாரூரர் என்று பலர். அவர்களைப்பற்றி இப்போது சொல்லட்டுமா?"

மகனின் அறிவையும் நினைவையும் உள்ளத்திலே போற்றிய தந்தை,

"அரசு! உன்னையும் உனக்குக் கற்பித்த ஆசிரியரையும் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்று ... நம் வடலூர் வள்ளற்பெருமானைப்பற்றி உன் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கவில்லையா? அவரைப் பற்றி நீ குறிப்பிடவில்லையே!" என்றார் சற்று வருத்தத்தோடு.

புரிந்துகொண்ட மகனும் விட்டுக்கொடுக்காமல், "நீங்கள் நாள்தோறும் காலை வழிபாட்டின்போது உள்ள

முருகிப் பாடுவீர்களே—அந்த அருட்பாவை இயற்றிய வடலூர் இராமலிங்க அடிகளைப்பற்றித்தானே குறிப்பிடு கிறீர்கள்? அவர் வரலாற்றைத்தான் நம் வீட்டு நூல் நிலயத்திலுள்ள நூலைப் படித்துத் தெரிந்துள்ளேனே! ஆசிரியர் வேறு சொல்லித்தரவேண்டுமா அப்பா?'' என்று சிறிது சிரித்தபடி கூறினன்.

"தெரிந்திருக்கிறயா, அரசு! அஃது எனக்குத் தெரியவில்லையே. நல்லது! நீ இனி முன்னேறிவிடுவாய். தெய்வப் பொதுநெறி உனக்குப் புரிந்துவிடும். அந்த வள்ளற் பெருமான்தான் நமக்கு வாழ்வருளியவர். அவரை இளைஞருலகமும் கற்று நன்கு புரிந்துகொள்ள வேண்டும்; ஆசிரியர்களும் அவர் வகுத்த பொதுநெறியை அருளமுதமாய் அள்ளித்தரவேண்டும். பெரியோர்களிற் பலர் இன்னும் வடலூராரைப் புரிந்துகொண்டு போற்ற வில்லையே யென்ற அன்பு ஏக்கம் எனக்கு அடிக்கடி ஏற்படுவதால்தான் நான் இதனை அழுத்தமாகக் குறிப்பிடு கின்றேன். நீ தெரிந்திருக்கிறதுபற்றி மகிழ்ச்சிதான் அரசு! மேலும், நீ அவரை எவ்வளவுக்குப் புரிந்துள்ளாய் என்பதையும் இப்போது அறிய விரும்புகிறேன். கூறுவாயா?''

இப்படி இளைய நெஞ்சைக் கிள்ளிவிட்டதுபோலக் கிளர்ச்சிபெறக்கேட்ட தந்தையார் சில கேள்விகளைப் போட்டார். அவை குருவி தலையில் பனங்காயை வைத்தது போலச் சுமைதந்தபோதிலும் அவன் மயங்கவோ தயங்கவோ இல்லை. தந்தையறிவு மகனுக்கும் இருக்கு மல்லவா!

"அரசு! வள்ளலாரென அவருக்கு ஏன் பெய ரிட்டனர் தெரியுமா?''

"வடலூரிலே அவர் மக்களின் பிணிபோக்க மருந்துச் சாலையும் ஆருயிரின் பசிபோக்க அறச்சாலையும் நிறுவி, இன்றும் அவை செயல்பட்டுவருவதாக நான் படித் திருக்கிறேனே; அதனுல்தான் வள்ளலாரெனப் பெயர் சூட்டியிருப்பார்களென நினைக்கிறேன்!"

"ஆமாம், அரசு! அப்படித்தான்; நன்கு சொன்னுய். இன்னும் அவர் அத்தொண்டுகள் செய்த தோடு எதிர்காலத்தில் மக்கள் தெய்வப் பொதுநெறியைப் போற்றி அமைதியுடன் வாழவேண்டுமென்பதற்காக மழைபோல அருட்பாவைப் பொழிந்து வைத்துள்ளா ரல்லவா? அதனுலும் அவருக்கு அப்பெயர் பொருத்தம் தானே! அரசு! இன்னும் நம் வள்ளற்பெருமான் கண்ட தெய்வப்பொதுநெறியில் ஒரு புதுமையிருக்கிறதே அஃது என்ன தெரியுமா? கூறு . இம்...."

"அதுவா! அஃது...ஒரு கூட்டத்தில் கேட்டிருக் கிறேன், வடலூர்ப்பித்தன் என்பவர் சொன்னுர். 'அன்பே வடிவான மாணிக்கவாசகர்முதல் உணர்வே உருவான நம்மாழ்வார்வரை அடியார்கள் எல்லாரும் ஆண்டவனையே போற்றிப் புகழ்ந்து பாடித் தங்களுக்காக அருளைப்பெற்றனர். வள்ளற்பெருமானே மக்கள்படும் துன்ப துயரங்களையெல்லாம் ஆண்டவனின் திருமுன்னே சென்று எடுத்துக்கூறி முறையிட்டு அருளை வாங்கித் தந்தார். அவருடைய அருள்முயற்சி, அறங்கூறும் மன்றத்திலே நல்லவர்பக்கம் வழக்காடுகின்ற வழக் குரைஞரின் தொண்டுபோன்றதாகும்—' என்ற அவர் பேச்சிலிருந்து—வள்ளலார் ஆண்டவனைப் புகழ்ந்ததோடு ஆருயிர்களிடத்திலே இரக்கங்காட்டி மன்ருடினுர் என்ற

ஒரு மனக்கவர்ச்சியும் எனக்கு ஏற்பட்டது. அதனையே நான் ஒரு புதுமையென்று கூற விரும்புகிறேன்."

"அரசு! அழகாகச் சொன்னாய். உனக்கு எப்படி இந்த வுள்ளம் வாய்த்தது? அது நான் பெற்ற பேறே. இனி, நீ ஒன்றை அறிந்திருக்க வேண்டுமே. பொதுநிலைக் கழகம் என்னும் 'சன்மார்க்க சங்க'த்தை ஏன் நிறுவினார்?"

"அதையும் நான் கேட்டிருக்கிறேன்! உலகிலுள்ள மக்களெல்லோரும் உள்ளத்தில் மாசுடையவராய்ப் போய்விட்டனராம்; உடம்பிலே மட்டும் வெளுப்புக்காட்டி மனிதராக நடிக்கின்றனராம். அத்தகையவரையெல்லாம் திருத்திப் பண்படுத்துவதோடு அவரை இப்பிறப்பிலேயே இறைவனருளைப்பெற்று அழிவில்லாத இன்ப வாழ்வு பெறச் செய்வது சங்கத்தின் குறிக்கோளாகும் என்ற பேச்சும் எனது நெஞ்சை யுருக்கியபோதுதான் வள்ளலார் சங்கம் நிறுவிய நோக்கம் புரிந்தது."

"அதுமட்டுமில்லை! வள்ளற்பெருமானே தாம் இந்த உலகத்திற்கு வந்த வழியையும் கூறியிருக்கிறார். பொதுநெறி யூட்டுகின்ற சங்கத்தை யமைத்து அதில் அனைவரையும் சேரவைத்து இன்புறுத்துவதற்காகவே தம்மை இறைவன் படைத்தான் என்று அவர் வெளியிடும் கருத்துடைய பாடலை நீ படித்திருக்கிறாயா? படிக்கவில்லையானால் படி! இதோ அந்த உயிர்ப்பாட்டு; அருட்பாட்டு:

அகத்தே கறுத்தும் புறத்துவெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்தி சன்மார்க்க
சங்கத்து அடைவித் திடஅவரும்

இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்து
இடுதற் கென்றே எனையிந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே.''

தெளிந்த குரலில் அன்பு இழையோடத் தந்தையார் பாடிய இப் பாட்டைக்கேட்ட அரசு சிறிதுநேரம் மெய்ம் மறந்துபோனான். பள்ளிப் பாடத்தில் நினைவு வர அவன் பாடநூலைக் கையிலே யெடுத்தான்!

தந்தையும் வேறு வேலையிலே ஈடுபட்டார்.

— — —

2. உலக வியப்பினும் வியப்பு!

அன்று பேரொளிசுடரும் கார்த்திகை நன்னாள். காலையில் தன் செங்கைகளால் சேவிக்க வேண்டிக் கதிரவனும் வந்து வீழ்ந்தான், கந்தவேளின் கோபுரத் தடியில்! மக்கள் சாரைசாரையாக வந்து சென்னைக் கந்தகோட்டத்தில் வழிபட்டு மீண்டுகொண்டிருந்தனர். அவர்களில் நான்கு பேர் கோபுரவாயில் தெருவின் முன் பக்கத்தில் நின்று உரையாடிக் கொண்டிருந்தனர்.

அறவணன் : நம் கந்தவேளின் திருமுன் நின்று, 'தண் முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே!' என்று உள்ளமுருகிக் கண்ணீர் மல்கிப் பாடுவாரே இராமலிங்க அடிகள், அவர் ஏன் இப்போதெல்லாம் வருவதில்லை?

தணிகைமணி : ஆமாம்; அவர் பாடும்போது எத்தனை பேர்கள் அப்படியே மெய்ம்மறந்து கண்கசிய நின்று கேட்பார்கள்! அந்த அருமைக் காட்சியை மறக்கவே முடியாது. அருட்கடலில் பவழச்சிலை நிற்க அதன் மேல் பாலலை வீசியதுபோன்ற அப் பெரியவரின் உருவத் தோற்றம் என் கண்ணைவிட்டு அகல வில்லையே! அவர் நம் சென்னையைவிட்டே எங்கோ சென்றுவிட்டாராமே?

அருளேந்தி : ஆமாம், தணிகைமணி! நானும் கேள்விப் பட்டேன். அவருடைய அருட்பெருமையை யாரால் தான் மறக்க முடியும்? அன்றொரு நாள் இந்தத் தெருவிலே ஒரு வீட்டுத் திண்ணையிலே தங்கி

யிருந்த அம்மணச் சாமியார் என்னும் துறவியார் பிற மனிதர்களைக் கண்டு, 'அதோ பார்! சொறிநாய் போகிறது' என்றும் 'இதோ பார்! வெறிகொண்ட புலி செல்கிறது' என்றும் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது அந்தப் பக்கம் இராமலிங்கர் வரக்கண்ட அந்தத் துறவியார், "இதோ வருகிறாரே இவர் தாம் உண்மையான மனிதர்; இவராலே இந்த உலகம் பெரிய நன்மையை அடையப்போகிறது" என்று சொன்னதை என் தந்தையார் கேட்டுவந்து என்னிடம் சொன்னது இன்னும் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அத்தகைய அருளாளர் நம்மூரைவிட்டுப் போய்விட்டது எனக்கும் பெரும் வருத்தத்தையே தருகின்றது.

சீராளன்: நான் இன்னொரு செய்தியும் கேள்விப்பட்டேன், இரண்டு நாளைக்குமுன்; அறவணா! அதனை நினைக்க நினைக்க வியப்புக் கடந்து செல்கிறது; அதனை உலக வியப்புகளைவிட மேலாகத்தான் கருதவேண்டும். அடிகளார் சென்ற சில காலத்திற்குப்பின் அந்த நிகழ்ச்சியை அங்கே நிகழ்த்தியிருக்கிறார்.

அறவணன்: ஓ! சீராளா! அடிகளார் நிகழ்த்திய வியந்து மகிழும் செயல்கள் ஒன்றா, இரண்டா! எத்தனையோ உண்டு. அவற்றில் எதனை நீ குறிப்பிடுகிறாய்? ஒருநாள் நள்ளிரவில் கோவிலில் வழிபாடு செய்துவிட்டு வந்து தம் அண்ணா சபாபதியாரின் வீட்டில் கதவைத் தட்டியபோது எல்லாரும் அயர்ந்து உறங்கியதால் பசித் துன்பத்துடன் இராமலிங்கர் திண்ணையிலேயே படுத்துறங்கினாரென்றும் அப்

போது இறைவியாம் வடிவுடையம்மை ஓர் இலை யிலே பொங்கலுணவைக் கொண்டுவந்து அடிகளைத் தட்டியெழுப்பி அண்ணியாரைப்போல ஊட்டிவிட்டுச் சென்றாரென்றும் சிறிது நேரங்கழித்துக் கதவைத் திறந்துகொண்டு அண்ணியாரே வந்து அடிகளை எழுப்பி உணவுண்ண வா என்று அழைத்திட அவர் திடுக்கிட்டு எழுந்து, இப்பொழுதுதானே பொங்கல் கொடுத்துச் சென்றீர்கள் ; மீண்டும் ஏன்? என்று வினவிடவும் அண்ணியார் அதனை மறுத்திட அடிகள் வியந்து அருளம்மையே இத் திருவிளை யாடலை நமக்குப் புரிந்திருக்கிறாளென்று போற்றிய செயலொன்றையும் நான் கேட்டு உருகியிருக் கிறேன். அதைத்தான் நீ சொல்கிறாயா ?

வீரான் : இல்லை; இல்லை. அந்த நிகழ்ச்சியானது பழைய நிகழ்ச்சி! நான் இப்போது கூறுவது வேறு: புதியது! என் பெரிய தந்தையிடம முத்தியாலுப் பேட்டை சோமுச் செட்டியார் சொன்ன உண்மை யைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். கேளுங்கள் அனை வரும்.

இராமலிங்கப் பெருமான் 'கருங்குழி' என்னும் ஊரையடைந்து வேங்கட ரெட்டியார் இல்லத்து விடுதியிலே தங்கியிருந்தார்கள். வேங்கடர் நம் பெருமானிடம் பேரன்பு கொண்டவர்; அவருடைய மனைவியும் பெருமானுக்கு வேண்டிய பணிவிடைகளை ஆர்வம் பெருகிச் செய்து வந்தார். ஒருநாள் இரவு தம் வழிபாட்டு அறையிலே இராமலிங்கர் அருட் பெருஞ்சுடராம் ஆண்டவனை வழிபட்டு அருட் பாடல்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். குத்து

விளக்கும் எரிந்துகொண்டிருந்தது. நீண்ட நேர மானதும் விளக்கின் சுடர் மங்கியது. பொங்கிய பாட்டுணர்ச்சியிலே தங்கிய பெருமான் நெஞ்சமோ கண்ணோ அதைக் கண்டது. விளக்கிலே எண் ணெய் இல்லை யென்றுணர்ந்த அவர்கள், பக்கத்தி லிருந்த புதுப்பானைக் குடிநீரை நீரென்று கருதாமல் எடுத்து விளக்கிலே விட்டார்கள். விளக்கு பேரொ ளிச் சுடர்விட்டு எரிந்தது! பெருமானும் பலநூறு பாடல்களை எழுதி முடித்துவிட்டு இரண்டு மணிக்கு மேல் உறங்கிவிட்டார்கள்.

விடியற்பொழுதில் பணிவிடை செய்ய வந்த வேங்கடரின் மனைவி, பெருமான் உறங்குவதைக் கண்டதோடு விளக்கு புத்தொளி வீசி எரிவதைக் கண்டு வியந்து போனாள். விளக்கில் எண்ணெய் கொஞ்சந்தானே இருந்தது, அஃது எப்படி இது வரையில் சுடர்விட்டு எரிய முடியும்? என்று தனக் குள்ளே கேட்டுக்கொண்ட அவள் விளக்கு அகலை உற்றுப்பார்த்தபோதுதான் அது தண்ணீரென்று தெரிந்தது. பெருமான் நீண்ட நேரம் எழுதிக் கொண்டிருப்பார்களென்று தெரிந்திருந்தால் வேண் டிய எண்ணெயை விட்டுவைத்திருப்பேனே, ஐயோ! பெருமான் என்ன நினைத்தார்களோ? என்று அஞ்சினாள் ஒரு புறம்; மறுபுறம் வியப்பால் உள்ளம் உந்தப்பட்ட அவள் தன் கணவரிடம் வந்து செய்தி கூறினாள். கணவரும் ஓடிவந்து நீரிலே எரியும் விளக்கைக் கண்டு தொழுது உருகி நின்றார்.

பொழுது வெள்ளென விடிந்ததும் பெருமான் துயிலெழுந்து விளக்கு எரிவதைக் கண்டு

கொண்டே வெளியே வரும்போது வேங்கடரும் அவர் மனைவியும் அவர்கள் திருவடியிலே விழுந்து வணங்கி விளக்கு எரியும் வியப்பைக் கூறினர்கள். பெருமானும் புன்முறுவல் பூத்தபடி வியப்புடன், 'எல்லாம் அருட்பெருஞ்சுடராம் ஆண்டவனின் பெருமையே' என்று கூறிக் கைகளைக் கூப்பினர்கள்.

கணவரும் மனைவியும் பெருமானை நோக்கி, 'பெருமானே! உங்கள் பேரருளால் நாங்கள் பேறு பெற்றோம். எங்கள் மனையும் உலக வியப்பாம் நீரெரிந்த பேருண்மையைப் பெற்றது' என்றனர்.

அறவணன்: ஆ! அப்படியா? சீராளா! என்னுடம்பெல்லாம் புல்லரிக்கிறதே. இத்தகைய அரியபெரிய செயல் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகில் எந்த நாட்டிலும் நிகழ்ந்ததாகக் கேள்விப் பட்டதே இல்லையே! எல்லாம் நம் இராமலிங்கரின் அருளாற்றல்தான்; அவர் பெரிய சித்தரன்றோ! ஆமாம் ...இந்த அருள்மாட்சியுடைய அருஞ்செயலை நம் சோமுச் செட்டியாருக்கு யார் கூறினராம்? தெரியுமா உனக்கு?

சீராளன்: நம் வள்ளற் பெருமானே அவருக்குக் கூறி யருளியிருக்கிறார்கள். அதுவுமொரு பேறல்லவா!

அந்த இனிக்கும் செய்தியைத்தான் எவ்வளவு உருக்கமாக விளக்கியிருக்கிறார்கள் தெரியுமா? அதையும் கேள்; சொல்கிறேன்.

'உலகம் எவ்வளவு ஒளிவிட்டுத் திகழ்ந்தாலும் மனித வுள்ளம் இருட்டாகிவிடுமானால் ஒரு பயனும் விளையாது; மாறாக அழிவுதான் ஏற்படும். இருட்டென்பது உள்ளத்திலே உண்டாகும் பொய்யாகும்.

அப் பொய்யைத் தோன்றுமற் காக்கும்போதே மெய் விளக்குத் தோன்றும். அதிலேதான் இறைவனும் விளங்குவான்! இந்த உண்மையை உலகச் சான்ருேராகிய திருவள்ளுவர் முதலியோர் சொல்லிச் சென்றிருக்கிருர்கள். நானே அதனை யெண்ணிப் பாராமல் உலகப் பொய் மயக்குகளையே விளக்கென்று கொண்டு உள்ளம்பொங்கிப் போலி மகிழ்வு கொள்கிறேன்; இது வெறும் பாழ்தான். இந்தப் போலியுணர்வும் புதுமையில்லையே? வழிவழியாக வன்ருே வந்து மக்களை யழிக்கின்றது? அந்தோ! பொய்செய்யும் கொடுமைக்கும் அளவேது?

சென்னைவாழ் நண்பர்களே! புகழுக்குரிய அன்பர்களே! மெய்யும் பொய்யும் இப்படிப் போட்டி போடும் இந்நாளில் என் வாழ்க்கையில் ஓர் அருட் பெருஞ்செயல் நடந்திருக்கின்றது. ஆம்; அருட் பெருஞ்சுடராம் இறைவனேதான் அதனை நிகழ்த்தி யிருக்கிருன். அன்ருெருநாள் நள்ளிரவில் வழிபடும் ஆண்டவன் திருமுன்னே எரிந்து மங்கிய விளக்கிலே தண்ணீரைவிட்டு நிரப்பினேன். அது நெய்விட்டதுபோல எரிந்து பெருஞ்சுடர்வீசிப் புதுமை யளித்துக் கொண்டிருந்தது.'

இவ்வாறு நம் பெருமான் விளக்கி மகிழ்வித்ததோடு அந்தப் பாட்டையும் அருள்பொலியப் பாடி யிருக்கிருர்கள்:

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்கு
இல்லையென்ருர் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி
கின்றேனேர் புதுமை யன்றே

செய்விளக்கும் புகழுடைய சென்னை நகர்
நண்பர்களே! செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கும்
எரிந்ததுசந் நிதியின் முன்னே.

மற்றமூவரும்: என்ன அருஞ்செயல்! என்ன அருட் செயல்! ஆ! ஆ! ஆ!

வியப்பிலே ஆழ்ந்த நால்வரும் தங்கள் நெஞ்சங்களைக் கோவிலாக்கிக்கொண்டு வள்ளற் பெருமானை வாழ்த்தி வணங்கியவாறே வீட்டை நோக்கி நடைபோட்டனர்.

---

3. கடற்கரையிலே...

தந்தையை இழந்துவிட்ட மாறனின் வருத்தத்தையெல்லாம் கண்ணுயிருந்து போக்கி வந்தார் புலவர் இளமுருகு. அவரை அவன் அடிக்கடி நினைத்துப்பார்ப்பான். அன்று பள்ளியில் நடந்த ஓட்டப் பந்தயத்தில் அவன் இடறி விழுந்து மண்டை யுடைந்தபோது, அவர் பதைபதைத்து ஓடிவந்ததையும் தமது மேல்துண்டைக் கிழித்துக்கட்டி வடியும் குருதியை நிறுத்திவிட்டு அவனை மருத்துவமனையிலே சேர்த்து உதவியதையும் மறக்கவே முடியாது.

மற்றொருநாள் அவன் வகுப்பறையில் பசியால் களைப்புற்று மயங்கி விழுந்தபோது அவர் அதனையுணர்ந்து உணவு வரவழைத்துக் கொடுத்ததையும் அவனால் மறக்க முடியாது.

தன்னை ஏழையென்று மாணவர் பலர் புறக்கணித்த போதும் அச் செருக்குடைய மாணவர்களை அறிவால் தெருட்டிப் பண்படுத்திவரும் அவர்மேல் அவனுக்கு மதிப்பு வளர்ந்துகொண்டே வந்தது.

இளமுருகு அவர்கள் ஆசிரியருக்கு வேண்டிய முழுத் தகுதியுடையவர். அன்புப் பார்வையும் வணங்கிய தோற்றமும் அவருடைய தனிச்சிறப்புகள். பகட்டில்லாத அவர்கொண்ட எளிய ஆடைகளும் அரிய உணவும் புகை பிடிப்பவரைக் கண்டால் முகஞ்சுளித்து ஒதுங்கும் செயலும் அவரை மற்ற ஆசிரியர்களிடமிருந்து வேறு

பிரித்துக்காட்டும். இத்தகைய அவருடைய பண்புகளும் மாறனைக் கவர்ந்தன. இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் வகுப்பறையிலே பாடம் நடத்தும்போது உருக்கமான நிகழ்ச்சிகளுக்கு உருகிக் கண்ணீர் மல்கிவிடுவதும் பாடப் பொருளிலே அவர்கொண்ட ஈடுபாட்டை மாணவருக்கு உணர்த்தி நிற்கும்.

காரைக்குடியிலே மாறனின் தந்தை இறந்து இரண்டாண்டு ஆகிறது. அப்போது அவன் அங்கு எட்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். தந்தை ஒரு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினர்; குறைந்த வருமானம். அதுவும் தந்தையோடு போய் விட்டது. குடும்பமோ வறுமையாம் கொடுமைப்பிடியால் இறுக்கப்பட்டு நைந்தது; துன்பச் சக்கரத்தின் பற்களிலே தாயின் நெஞ்சு அகப்பட்டுக்கொண்டு தவித்தது. அதனுல் ஒரு தங்கையும் மாண்டாள், இந்தச் சுழற்சியைக் கண்ட மாறனின் பிஞ்சுமனம் துடித்தது. பிறந்துவிட்டதால் வாழவேண்டுமே! வாழ்வும் பழிக்கப்படாமல் வாழ வேண்டும். அந்தத் துணிவு தாய்க்கும் மகனுக்கும் வந்தது. மூத்தவனுகிய மாறனுக்கு மற்றும் இரு தங்கைகள் இருந்தார்கள்.

தாய் காரைக்குடியில் ஒரு வீட்டுணவு விடுதியிலே மா அரைத்துக் கொடுத்தும் பண்புடைய சில வீடுகளிலே அப்பளமிட்டுக் கொடுத்தும் ஏதோ கிடைக்கும் கூலியில் வாழ்வை ஓட்டிவந்தாள், தள்ளுவண்டிபோல. மகனும் அந்த வழியில் உழைத்திடத் தவறவில்லை. அவன் மாலை தோறும் பள்ளி விட்டு வந்ததும் ஒரு விடுதிக்குச் சென்று 'சுவை நீர்'த் தூக்கை வாங்கி வந்து மக்கட்கூட்டம் சுழலும் ஆரவாரம்மிக்க 'கல்லுக் கட்டி' என்னுமிடத்தைச் சுற்றிச்

சுற்றிச் 'சூடான சுவைநீர்' 'சூடான சுவைநீர்' என்று சொல்லி விற்கும்போது அவன் வாயே சூடு கண்டு விடும்! அவனுடைய நிலேக்காகவே சிலர் இரக்கப்பட்டுக் காசு கொடுத்து வாங்குவார்கள்.

இப்படி நாட்களேத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். வறுமையைக் கொடுத்தாலும் கடவுள் மாறனுக்கு நல்ல அறிவைக் கொடுத்திருந்தான்.

திருச்செந்தூரிலே அவன் சித்தி வீடு உண்டு. சிறிதளவு வளமாக வாழ்ந்து வந்தாள் அவள்; தன் அக்காவின் குடும்பம் அல்லலுற்றுச் சிதைவதையெண்ணி மிக வருந்திஞள். மூத்தவஞய் அவள் குடும்பத்தை முதல்நின்று காப்பவஞய்த் தோன்றியுள்ள மாறனே மட்டும் இங்கே அழைத்துவந்து படிக்கவைக்க வேண்டுமென நினேத்தாள்.

மாறனும் அதற்குத் தகுதியுடையவஞய் இங்கே வந்து படிப்பைத் தொடர்ந்தான். பத்தாம் வகுப்புப் படிக்கும்போதுதான் புலவரையாவின் அன்பை அவன் கவர்ந்தான். சித்தியின் இல்லத்திலே அன்போடு பேணப்பட்டாலும் தனியாகப் பாடம்கேட்க அவன் இளமுருகு இல்லத்திற்குச் செல்லும்போதெல்லாம் அவர் மனேவியாரால் இனிய உண்டிகள் ஊட்டப்பெறுவான். வறுமையால் 'சுவைநீர்'த் தூக்கினேத் தூக்கி விற்றுப் பண்பட்ட மாறனும் தன்ஞலியன்ற சில வேலேகளே ஆர்வத்துடன் செய்து மகிழ்வான். ஊதியமொன்றும் வாங்காமல் தனிப் பயிற்சியளிக்கும் அந்த நல்லாசிரியருக்கு அவனுடைய பணிவும் ஆர்வமுமே ஈடாகிவிடும்!

பள்ளியில் பலநூறு மாணவர்கள் பயின்றபோதிலும் மாறனுக்கு வாய்த்த வகுப்புத் தோழர்கள் கிறித்தவரும்

முகமதியருமே யாவர். இந்த நண்பர்கள் தங்கள் தங்கள் சமயத்தின்பால் பற்றுக் கொண்டிருப்பதாலே வகுப் பறையில் ஆசிரியர் இளமுருகு பிற சமயப்பாடங்களை நடத்தும் போதெல்லாம் ஆர்வங் காட்டமாட்டார்கள். அந்த நேரங்களில், அவர்கள் அந்தப் பாடங்களிலே மதிப்பெண்களை இழந்து விடுவார்களே என்று இரக்கப் படும் மாறன் அறிவுறுத்திக் கவனிக்கச் செய்வான். அறிவால் அந்த நண்பர்கள் மாறுபட்டுப் பேசினாலும் அன்பினாலே மாறன் தழுவிக்கொண்டுவிடுவான்; மாற மாட்டான்.

ஒருநாள் ஓய்வு நேரத்தில் மாறனிடம் வந்து உரை யாடிய அந்த மாற்றுச்சமயத்தவர்களில் கிறித்தவ நண்பன் கூறினான் :

"மாறனே! எங்கள் விவிலிய சமயத்தின் மறைநூல் உனக்குத் தெரியுமா? அதைத்தான் உலகில் மிகப் பலர் படிக்கின்றனர். அதிலே எவ்வளவு உயரிய கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன தெரியுமா? அதனாலே எங்கள் கிறித்தவ சமயந்தான் உயர்ந்தது. நீ எங்கள் கோவிலுக்கு ஒருநாள்கூட வரவில்லையே.."

இதைக் கேட்டு அன்புடன் மாறன் சிரித்துக்கொண் டிருந்தபோது இடைமறித்த நண்பன் நபியடியான் பேசத் தொடங்கினான் :

"நண்பா! ஏசுவடியான் ஏதோ 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்று சொல்வதுபோலத் தன் சமயத்தை இமய உயரத்திற்கே கொண்டுபோய் விட்டானே! என் முகமதியச் சமயமிருக்கிறதே அது

மட்டுமென்ன...கீழேயா இருக்கிறது? எங்கள் கடவுளே வானத்தில் பிறையாக அல்லவா இருக்கிறார்! அவரைத் தொழும் எங்கள் சமயம் எவ்வளவு உயரத்திலிருக்கிறது பார்த்தாயா, மாறு!"

இப்பொழுது மாறன்மட்டுமன்று, மூவருமே சேர்ந்து ஃகீ ஃகீயென்று சிரித்தார்கள். ஒற்றுமையே மனிதப் பிறவியின் உயர்வைக் காட்டும் என்று ஆசிரியர் இளமுருகு சொன்ன பண்பிலே ஊறி வளரும் மாறனும் நண்பர்களுக்கு மறுமொழி கொடுத்தான்:

"அருமை நண்பர்களே! அவரவர் பிறந்த வீட்டுத் தாயகச்சமயம் அவரவருக்குப் பெரிதாகத் தோன்றலாம். ஆயினும் உலகில் உண்மை ஒன்றே ஒன்றுதான். மனிதன் பழிக்கு அஞ்சி நல்லொழுக்கத்துடன் வாழ அவனைக் காவல்புரிவதற்கு ஒரு தெய்வச் சமயம் இன்றி யமையாதது. அஃது இருக்கும்போதே மனிதன் விலங்காகப் பார்க்கிறான்; இல்லையானால் அவன் என்ன ஆவானோ? ஆகவே, எச் சமயமானாலும் அது மனித வுலகிற்கு ஒரே முறையில் நன்மை செய்யவேண்டும். அதனை நோக்குவதுதான் அறிவின் கடமையென்று ஆன்றோர்கள் கூறியிருப்பதாக நம் புலவரையா விளக்கி யுள்ளார்கள். இதனையுணர்ந்து இளமையிலேயே நாம் நம்முள்ளத்தைப் பண்படுத்திக் கொள்ளவேண்டும். சண்டை எதற்கு? விளையாட்டாகக்கூட நாம் வேறுபடக் கூடாது!"

அறிவொளி வீசிய இந்த உரையைக் கேட்ட நண்பர்கள் ஒரு மணித்துளிநேரம் மெய்ம்மறந்திருந்து விட்டு மாறனைப் பாராட்டினார்கள்.

அன்றுமுதல் மாறனுக்குச் சமயப் பொதுநோக்குப் பற்றிய ஆராய்ச்சியுள்ளம் ஏற்பட்டது. கடவுளைப்பற்றிய எண்ணமும் விஞ்சி நின்றது. தன் ஆசிரியரிடம் அவற்றையெல்லாம் கேட்டு அறிவுவிளக்கம் பெறவேண்டு மென்று ஆர்வங்கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலையில் இளமுருகனர் மாறனையும் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்று வருவது வழக்கம். அன்ருெரு மாலை தனிப் பயிற்சி முடித்துக் கடற்கரைக்குப் போகும் நேரத்தில், கடவுளைப் பற்றியும் சமயத்தைப்பற்றியும் தானறிய விரும்புவதாக ஆசிரியரிடம் கூறினுன் மாறன்.

அவ் விருப்பம் அவரை உவகையில் ஆழ்த்தியது. "அதற்கென்ன? கூறி விளக்குகிறேனே! கரும்பு தின்னக் கூலியா? வா, போகலாம்; கடற்கரையிலே விளக்குகிறேன்" என்று அவர் கூறியதும் இருவரும் புறப்பட்டுப் போனுர்கள்.

அலைகொஞ்சத் திருவடிகாட்டி அருள்பொழியும் முருகப்பெருமானின் திருமுன்னே தெற்குமணல்மேட்டில் அமர்ந்தார்கள். வெள்ளித் தகடுகளைச் சுருட்டியெறிவது போல் வெண்ணிற அலைகள் முழங்கியது புலவரின் உள்ளத்தைக் கிளரச் செய்தது. எண்ணற்ற வெண் மணற் பரப்போ வாழ்த்துக்கு உவமையாயிற்று.

மாறனின் அறிவுப்பசி கண்ட இளமுருகனர் விளக்கத் தொடங்கினுர்:

"அளவிலா ஆற்றலாக விளங்கும் கடவுள் ஒருவனே என்றுதான் உலகத்து அருளாளர்களெல்லாம் கூறிச் சென்றிருக்கிருர்கள். கடவுளின் பெயர் பலவாகத்

தோன்றலாம். அவற்ருல் கடவுள் பலராக முடியாது. அவரவர் அறிந்த மொழிகளிலே அப்படிப் பலபெயரைச் சூட்டியிருக்கிருர்கள். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்றும் 'ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்' என்றும் 'ஒன்றே என்னுருயிர்க்கோர் உறவே' என்றும் அவர்கள் அறிவுறுத்தியிருப்பதை நாம் மறக்கமுடியுமா? மனிதனை யெடுத்துக்கொள்! அந்தப் பிறவியால் அவனும் ஒருவனே. வடிவ எண்ணிக்கையாலும் அடையாளப் பெயராலும் பலராகத் தோன்றினுலும் மனிதத் தன்மை ஒன்றுதான்!

"ஒரே தன்மையுள்ள அவனுள்ளம் கடவுளைப்போல விரிந்தபோது அவன் கடவுளைக் கண்டான். 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்று கடவுளைப் பிறருக்குக் காட்ட விரும்பியபோதே அவரைப்பற்றிய கொள்கைகளைப் படைத்துச் 'சமயம்' என்று பெயரிட்டான். அச் சமயமும் கொள்கைகளை விளக்கும் முறையிலே பல தோற்றங்காட்டினுலும் பல வழிகளைப்போலத் தெரிந்தாலும் முடிவிலே சேருமிடம் கடவுளாகிய ஒரே கொள்ளிடந்தான்! நாகரிகத்தின் உயர்நிலையாகிய இவ் வுண்மையை உணரமுடியாத சிலரே சமயத்திலும் வேற்றுமைகளைக் கற்பித்துப் பிழைக்கின்ருர்கள்.

"மாரு! நீ எந்த வேற்றுமையிலும் மயங்கி விழுந்திடக் கூடாது; கடவுள் ஒன்று, சமயமும் ஒன்று என்ற ஒருமைப்பாட்டிலே உள்ளத்தை ஒன்றவைத்து இன்புற வேண்டும். சமய வேறுபாட்டினுல் உண்மை மறைக்கப் படுவதை உணர்ந்ததாலே நம் வடலூர் வள்ளற்பெருமான் ஒரு பொதுநெறியைப் படைத்தார்; இறவாத பெருவாழ்வு பெற்றவரல்லரோ அவர்!"

இங்ஙனம் விளக்கிக் கொண்டிருந்தபொழுது வானிலே வெண்மதி வட்டமிட்டு வந்தது இவர்களைக் காண்பதுபோல. இந்த முழு நிலவைக் கண்டதும் இளமுருகனாரின் மனக்கண்ணில் வள்ளலார் அருட்பா தோன்றி உணர்த்தியது!

எழுந்த அவருடன் மாறனும் எழுந்து சிறிது தூரம் சென்றான். அங்கே—பல சிறிய ஆறுகள் ஒன்றாகி வந்து கடலிலே கலக்கும் காட்சியை அவனுக்குச் சுட்டிக் காட்டினார் அவர்.

“மாறா! இதோ பார்க்கிறாயே, ஒரே கலப்பாகக் கலக்கின்ற ஆறுகளெல்லாம் எப்படி எங்கெங்கிருந்து வருகின்றன தெரியுமா? மேடுகளும் பள்ளங்களும் கடந்து எத்தனை நெளிவுகளைக்கொண்டு வருகின்றன! இவற்றைப் போலத்தான் பல சமயங்கள் தோன்றி இறுதியில் கரை காண முடியாத கடவுளைக் கலக்கின்றன. அந்த மாபெரிய உண்மையைத்தான் நாம் மேற்கொள்ளவேண்டும்! இடைப்பட்ட வேறுபாடுகளைப் பாராட்டக்கூடாது.”

கடவுளைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் ஒருமைப் பாடுகண்ட இந்த விளக்கம் மாறனது நெஞ்சில் நிலைத்து விட்டதுபோல அவன் முகம் பேசியது!

பின்னர் இல்லம்மீள இருவரும் நடைபோட்ட போதும் புலவர் விளக்கத்தை முடிக்கவில்லை.

“மாறா! அத்தகைய கடவுள் ஒருவனே நமக்குக் கண்கண்ட வாழ்வு! எந்தத் துன்பத்திலும் மனிதனை முழுமையாக நம்ப முடியாது. கடவுளே ஆறுதல்தரும் இறுதிப் புகலிடம்! உலகியல் வாழ்வில் நமக்கு ஏற்படும் சோர்வையும் வெறுப்பையும் போக்கி நிலையான இன்ப

நிழலையளிக்கும் கவின்மரமும் கடவுளேதான்! நம் நெஞ்சம் வறண்டு வேட்கையுறும் பொழுதில் அதைத் தணிக்க முன்னிற்கும் அழகிய பொய்கையும் அவன்தான்! உள்ளத்திலே உலகை வாழவைக்கின்ற மெய்யுணர்வாகிய அல்லி மலர முழுமதியாகத் தோன்றி ஒளி பாய்ச்சுகின்றவனும் அவன்தான்! இன்னும் இறைவனைப்பற்றி எவ்வளவோ புகழலாம். எல்லாம் அவன் கொடுக்கும் உணர்வுதானே!"

விளக்கத்தைச் சுவையொழுகக் கொடுத்த ஆசிரியர் அந்த அருட்பாவையும் தென்றலைப்போல மெல்லிசையில் பாடினார்:

"பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயற் சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே யெல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே"

கேட்டு மகிழ்ந்துகொண்டே மெய்சிலிர்த்து வந்த மாறன் அப் பாட்டைத் தன் மனச் சுவடியிலே எழுதிக் கொண்டான். ஆசிரியப் பெருந்தகையிடம் அறிவுவிடை பெற்ற அவன் தன் வீட்டை யடைந்தபோது சித்தியின் அன்பு மொழிகளோடு எதிர்பாராத இன்ப மொழிகளும் செவியிற்பட்டன. ஆம்; அவனைப் பெற்ற தாய் காரைக் குடியிலிருந்து வந்திருந்தாள்!

———

4. இருட்டறைக்குள் ஒரு பயல்

"அப்பாதான் அப்படியென்றால் அம்மாவும் அப்படி நடந்துகொள்ளவேண்டுமா? எப்போதும் அவர்கள் வெடுவெடுத்துச் சினக்கும்போது கடுகு வெடிப்பதுக்கு மேலாக முகத்திலே சொற்கள் வெளிவருகின்றனவே; ஏன்? எனக்கு வெறுப்பே ஏற்படுகிறது. என்றாலும் எனக்கும் சில வேளைகளில் சினம் தோன்றுகிறதே; அவர்களைமட்டும் நொந்துகொள்வதா? தம்பிக்குங்கூட என்னைப்போல்தான் தோன்றுகிறது; இதற்குக் காரணம் என்ன? மனிதர் எல்லாருமே இப்படித்தானோ? நம் குடும்பச் சிறப்பா?"

இங்ஙனம் முனகிக் கொண்டிருந்த கீரனுக்குக் காரணத்தைக் கண்டுபிடிப்பதிலே கவலை. அன்றொருநாள் தன் அப்பாவிடம் வீட்டிலே வந்து பேசிக்கொண்டிருந்த மாசிலாமணி அவர்கள் குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது.

"ஆனையப்பா! நீயேன் பையன்களிடத்தில் எப்பொழுதும் வெடு வெடுவென்று விழுகின்றாய்? அன்பாகப் பேசக்கூடாதா? அன்பாலேதான் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர முடியும். மனிதருள் பலர் இப்படித்தான் சினத்திலே மூடிப்போய்விடுகிறார்கள். சினத்திற்குப் பெரியவர் சிறியவர் என்பதில்லை. பிறக்கின்ற குழந்தையிடத்திற்கூடச் சினத்தின் அரும்பைக் காண்கிறோம். அது கத்தியழுகிறதே அதுவும் ஒரு

சினமே! எப்படியோ அஃது உயிரில் ஒட்டிக்கொண்டு வந்துவிடுகின்றது. நீ மட்டும் அதற்கு விலக்காகிவிட முடியாதுதான். என்றாலும் அதைத் தடுக்க நீ முயல வேண்டும். இல்லையேல், பிஞ்சு உள்ளங்களை அது வாட்டிவிடுவது மட்டுமன்று; வழி வழியாக வரும் ஒரு மரபு நோயுமாகிவிடும்.

"அப்பனே! இன்னும் சொல்கிறேன் கேள். இதற்கெல்லாம் அடிப்படை உயிரிலும் உள்ளத்திலும்தான் உள்ளது. உள்ளத்திலே ஒட்டிவிடுகின்ற அழுக்கு என்னும் ஆணவமிருக்கிறதே அஃது உயிரையும் பற்றிக் கொள்கிறது; சில நேரங்களில் உலகையே அழித்து விடுவதுபோல அச்சுறுத்தவும் செய்கிறது. எனவே, நாம் உள்ளத்தை எப்போதும் தூய்மையாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இதில் விழுகின்ற தீயதை உடனே விலக்கிவிடவேண்டும். அந்த அழுக்கைப் போக்கவில்லையானால் அஃது அடர்ந்து கறுப்பாகி உயிருக்கும் உரமாகிவிடும். இங்கே சினம்மட்டும் தோன்றாது; வஞ்சனை, பொறாமை, களவு, கொலை யாவுமே தோன்றிவிடும்."

கீரன் நினைவுக்கு வந்த இந்த நீண்ட உரை, பேராசிரியர் மாசிலாமணியாரின் அறிவு விளக்காக நின்று தன் ஐய இருட்டைத் தெளிவாக்கிவிட்டது.

மேலும் அப் பெரியாரைக் காணவேண்டும்; ஆறுதலுரை பெறவேண்டும் என்ற ஆசை அவனைத் தள்ளிக்கொண்டுவந்து அவரது வீட்டிலே விட்டது. கை கூப்பினான்.

"கீரனு, வா! என்ன... ஏதாவது சிறப்புண்டா? அப்பா ஏதேனும் சொல்லிவிடுத்தாரா?"

பேராசிரியரின் அன்புவரவேற்பு உள்ளத்தை நெகிழச் செய்தது. அவன் வேண்டிக்கொண்டான்:

"வணக்கம் ஐயா! அப்பா ஒன்றும் சொல்லவில்லை. நான்தான் தங்களைக் காணவந்தேன். அன்று ஞாயிற்றுக் கிழமை தாங்கள் வந்து என் அப்பாவுக்கு அறிவுரை கூறினீர்களே, அவ்வுரை அடிக்கடி சினத்தாலடிபடும் எனக்குப் பெரும் ஆறுதலைத் தந்தது. அந்த உரையில் 'உள்ளத்தில் ஒட்டும் அழுக்கானது கறுப்பாகி உயிரையே ஆட்டிப் படைக்கும்' என்று சொன்னதை மேலும் இப்போது விளக்கினால் எனக்குப் பயனாகும்."

இளைஞனின் இந்த வேண்டுகோளை விரும்பிக்கேட்ட பேராசிரியர் உடனே விளக்கத் தொடங்கினார்:

"கீரா! நீ நல்லவன். என் நண்பராகிய உன் அப்பாவைப்போல நீ சினமுடையவனாக ஆகமாட்டாய் என்று நினைக்கிறேன். அதனால்தான் நீ விளக்கம் கேட்க வந்திருக்கிறாய்; கேள்!

"முரட்டுப் பொருளிலே அழுக்கு விரைவில் ஒட்டுவது போல மென்மையான பொருளிலே ஒட்டுவதில்லை. முரட்டுநூல் வேட்டியில் அழுக்கு உடனே ஒட்டிக்கொள் கிறது. மெல்லிய நூல் வேட்டியிலோ அழுக்குப் பலநாள் சென்றபின்தான் ஒட்டுகிறது. மனித உள்ளத்தில் முரடும் உண்டு; மென்மையும் உண்டு. உலக அழுக்குகள் இருவகை உள்ளத்திலுமே ஒட்டத்தான் செய்கின்றன. எனினும், மெல்லிய உள்ளத்தின் அழுக்கை விரைவிலே அன்பினால் கழுவிவிட முடியும்! ஆனால், முரட்டு

உள்ளத்து அழுக்கை அன்பாலோ அறிவாலோ கழுவ முடியாது.

"அக் கடினமான அழுக்காகிய 'ஆணவம்' உள்ளத்தை இருட்டறையாக்கிவிடுகின்றது. இருட்டிலே என்ன தெரியும்? ஒளியிருக்கவேண்டிய உள்ளத்தில் இருள் இருப்பதா? அந்தோ! கொடுமை. இங்கே அன்போ அறமோ சிரிப்போ வேறு உயரிய பண்புகளோ தோன்ற முடியுமா? அந்த ஆணவம் ஓர் இரக்கமற்ற அதிகாரியாக வன்றோ இங்கே ஆட்சி செய்கிறது. இது மட்டுமா? இருட்டறைக்குள் கிடந்து நல்லனவற்றைக் காண முடியாதபடி செய்யும் ஆணவ அழுக்கு, வெளியுலகையும் உயரிய தெய்வக் காட்சியையும் வந்து காணமுடியாமல் குருடாகவும் முடமாகவும் ஆக்கிவிடுகிறதே! இந்த அளவிற்கு வலிமையுடைய ஆணவத்திலிருந்து சினம் தோன்றுவதிலே வியப்பில்லையல்லவா!

"அன்புக் கீரனே! இப்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீ நம் வடலூர் வள்ளற் பெருமானைக் கேள்விப்பட்டிருப்பாயே! அப் பெரிய அருளாளரைக் கூட இந்த ஆணவமாகிய பயல் விடவில்லையாம்: பல காலம் ஒளிந்திருந்து ஊறு செய்தானும். பின்னர் ஆண்டவனருளாலேதான் இவனைக் கண்டுபிடித்துத் துரத்தி விரட்டினராம். கண்டுபிடித்ததும் அவருடைய ஆற்றலையுணர்ந்த ஆணவம் அஞ்சி யெங்கோ ஓடி விட்டதை யுணர்கிறோம்! அந்த உண்மை நிலையை அவரே வெளியிடுவதைப் பார்!

'எத்துணையும் காட்டாத ஆணவம் என்றிடுமோர்
இருட்டறைக்கோர் அதிகாரி குருட்டு முடப் பயலே!
இத்தனைநாட் பிடித்ததுஉனைக் கண்டுதுரத்திடவே.'

அருட்பாவைக் கேட்ட கீரன் அகம் குளிர்ந்து உடம்பு சிலிர்த்துப் போனுன். பேராசிரியருக்கு நன்றிகூறி விடைபெற்றபோது அவன் முகத்தில், உள்ளத்திலே கொண்ட உறுதி பளிச்சிட்டது.

'இனி, ஆணவமென்ன ? சினமென்ன ? எதனையும் வெல்வேன்' என்று எண்ணிக்கொண்டு புறப்பட்டான் அவன்.

5. துடித்த நெஞ்சம்

அப்பொழுது தெய்வச் சுடரெல்லாம் வந்து வியந்து கண்டுகொண்டிருந்த நேரம். நிலைக் கண்ணாடிக்கு முன் அமர்ந்து அதிலே கடவுளின் திருமேனியைக் கண்டு வழி பட்டார் அவர். மனவொருமைப்பாடு அவருக்கு நிலை குத்தி நின்றது.

"அந்தோ! என்னப்பனே! இந்த உலகம் இன்னும் விடியவில்லையே. நான் வேண்டுவதைக் கேட்டு இப் போதே அருள்புரியமாட்டாயா? எனக்காக ஒன்றும் கேட்கவில்லை. இந்த ஆருயிர்களுக்கெல்லாம் நான் அன்புத்தொண்டு செய்யவேண்டும். இதுவே என் முதல் தொண்டாகும். இதனைச் செய்துகொண்டே உன் புகழையும் பாடுவேன். இங்குமட்டுமன்று; வேறு எந்த உலகத்துக்கும் சென்று பாடுவேன்."

இப்படி வேண்டிக்கொண்டபோது அவர் கண்களில் அன்பு முத்துகள் பொலபொலத்து உதிர்ந்தன. ஆம். அவர் கண்ணீர் மாலைதான் அப்படி அறுந்து விழுந்தது!

வழிபாட்டை முடித்துக்கொண்டு அடுத்த இருக்கை யிலே வந்து அமர்ந்த வள்ளற் பெருமானுக்கு ஒன்றும் ஓடவில்லை. கையிலே எடுத்த எழுதுகோல் அப்படியே ஒட்டிவைத்ததுபோல இருந்தது.

அல்லற்படும் மக்களின் துயரத்தைப் பாட்டாக்கு வதா? ஆண்டவனின் அருமை பெருமைகளைப் பாடி வைப்பதா? நெஞ்சிலே கேள்வி குழம்பி வட்டமிட்டது.

எனினும், அவருயிர் தேர்ந்தது. விழிகளிலே மக்களின் துன்பக்காட்சி ஒரு வலிமையுடன் நின்று பேசியது. உள்ளத்தையோ ஆண்டவன் பிடித்து இழுத்தான்! அவர் விடவில்லை. இழுத்தவன் முன்னிலையிலேயே அவர் பேசினார்:

"எந்தாயே! என் நெஞ்சம் பஞ்சு படாதபாடு படுகிறது. இனிப் பொறுக்கமாட்டேன். பசியாலும் பிணியாலும் மக்கள் வருந்தும் வருத்தத்திற்கு அளவே இல்லை. அஃது ஒரு சிறிதேயானாலும் என் கண்கள் காணப் பொறுக்கமாட்டா. செவிகளும் கேட்கப் பொறுக்கமாட்டா. நான் என்ன செய்வேன்? இறைவா! எனக்கு வலிமையேது? நீயே காத்தருள வேண்டும். எண்ணித் துடிக்கும் நான் வேண்டும்போது வேண்டும்போதெல்லாம் நீ அருள்புரிய வேண்டும்! அந்த அருளைக்கொண்டு மக்களின் வருத்தத்தைத் துடைத்துப் போக்குவேன். இதுவே என் வேட்கை; இறைவா! இதுவே என் விருப்பம்!"

கண்ணீரோடு பேசிய வடலூர்ப் பெருஞ்சுடரின் துயரமொழிகளைக் கேட்டு இறைவனும் கலங்கிப்போனான்.

"கவலைப்படாதே; காண்கிறேன். உன் தமிழுக்கு மேலும் துன்பச்சுவையைத் தந்துவிடமாட்டேன்; உன் விருப்பம் நிறைவேறும்."

கடவுளின் இந்த அருளுரை அவருக்கு ஓரளவு தெம்பையூட்டியது. அடுத்தநேரம் தமது இலக்கியத் தொண்டைத் தொடர்ந்தார்; அருட்பேழையிலே தம் சிந்தனை யமுதினைச் சொரிந்துகொண்டிருந்தார்.

அன்று மாலை ஆறு மணியிருக்கும். நகரத்தையும் நகர்ப்புறத்தேயுள்ள வயற்காடுகளையும் கண்டுவிட்டு மனம் ஒடிந்துபோய் வந்திருந்தார். அவரோ அருட் பாவலரல்லரா! இயற்கை வெளிகளைச் சுற்றிப் பார்ப் பதிலும் அவருக்குக் குறையாத ஆசையிருந்தது.

அந்த நேரத்திலேதான் நண்பர்களும் அன்புமிக்க மாணவர்களும் வந்து அவரைச் சூழ்ந்திருந்தார்கள். அடக்கிக்கொள்ள வியலாத அவருடைய அவலவுணர்ச்சி இங்கே பீறிட்டெழுந்தது. கண்டவற்றையெல்லாம் அப்படியே கொட்டிவிடுவதுபோலக் கூறினர்:

"ஒவ்வொருநாளும் நான் காணுகின்ற துன்பக் காட்சிக்கு எல்லையேது? இன்றும் கண்டேன், ஐயோ! அவற்றை யெப்படிக் கூறுவேன்? ஒரு தெருவிலே பார்த் தால் பட்டினிப் படைகள்; வீடு தவருமற்சென்று பசி போக்கவேண்டியும் யாரும் உணவு தராமல் விரட்டிவிட் டால் அயர்ந்து களைத்துப்போகின்ற என் அன்பிற்குரிய மக்கள்; வெறும் ஓட்டையேந்திய உயர்ந்த பிறவிகள். இவர்களைக் கண்டு பதைத்துப்போனேன். மற்ருேர் இடத்திலே கண்ட கொடுமை என்ன தெரியுமா? ஐயோ! வணக்கத்துக்குரிய மானிடப் பிறவிக்குத்தான் எத்தனை நோய்கள். உடம்பெல்லாம் நொந்து அழுகிப்போகும் நோயுடையவர்களும் கண்ணிழந்தவர்களும் காலிழந்தவர் களும் நொண்டி யலைந்து உயிரை வெறுத்துக் கதறியழும் அந்தக் கொடுமையினைக் கண்டபோது என் நெஞ்சம் துடிதுடித்தது. இன்னும் கொஞ்சமா? இவர்கள்தாம் இந்நிலைக்கு ஆளானுர்களென்ருல் கற்ற அறிஞர்களும் மானம் மிக்கவர்களுமா வருந்தித் துன்புறவேண்டும்? அவர்கள் நெஞ்சுகளும் ஏழையாக இளைத்துப்போய்

விட்டனவே! இவர்களைக் கண்டும் என் நெஞ்சு மெலிந்து துன்புற்றது. அன்பர்களே! மனிதப்படைப்பிலேதான் இத்தனை துயரங்கள் வேண்டுமா? பச்சையாக வளர வேண்டிய பயிர்களிற்கூட வாட்டத்தைக் கண்டேன். அப்பொழுதும் என்னுள்ளம் வாடி வதங்கியது. என்ன செய்வேன்? இந்த உலகத்தை என்னவென்று கூறு வேன்? இறைவா! என்னுருயிரே! இவற்றிற்கெல்லாம் ஒரு மருந்தை அருளமாட்டாயா? 'நிலைபெறும் இரக்கம் நீங்கில் என்னுயிரும் நீங்கும்; நின் திருவுள்ளம் அறியும்!"

சுற்றியிருந்த அன்பர்களின் முகமும் அகமும் தம்மை மறந்து பொம்மைகளைப்போலக் கேட்டுக்கொண்டிருந்த போது வள்ளலாரின் அந்த உரைகள் ஊனையுருக்கி உள்ளத்து ஒளியைப் பெருக்கின. விழிப்புணர்ச்சி கொண்ட அன்பு மாணவர்கள் அவரைப் பணிந்து வேண்டிக் கொண்டனர் :

"உலக வணக்கத்தைப்பெற்ற எம்பெருமானே! ஓரறிவு உயிராகிய பயிரைக்கண்டும் கண்ணீர் வடித்திருக் கிறீர்கள். இரக்கமே உருவான தங்களை வணங்கு கின்றோம். இரக்கத்தை வாங்கிய அந்தப் பிறவிகள் ஏன் அவ்வாறு துன்புறவேண்டும்? உழைத்து உண்ணக் கூடாதா? நோய்களைத் தடுத்து நலம்பேணக் கூடாதா? இந்தக் குறைகளுக்கெல்லாம் தலைவிதியே பொறுப்பு என்று கூறிவிடுவதா? எதுவாயினும் மனிதன் வாழப் பிறந்தவனே. அவர்களை வாழவைக்கும் அருளாற்றல் தங்களுக்கே உண்டு. தங்களின் இரக்கம் இறைவனின் திருவிருப்பம்; அதுவே ஆருயிர் மருந்து."

இந்தவேண்டுகோளைக் கேட்ட வடலூர்ப் பெருமான் அமைதியில் ஆழ்ந்தார்.

அன்பர்கள் புறப்படுமுன் பெருமானுக்கு முன்னிருந்த அந்தத் துயரப்பாட்டின் சுவடியை எடுத்துப் பார்த்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டார்கள். அவர்களையும் அறியாமல் கைகள் அப் பாட்டைப் படியெடுத்தன!

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறு இரந்தும் பசியரு(து) அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் ரேரென்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டு இளைத்தேன்.''

6. அஞ்சுவேன்!

பக்கத்துவீட்டுப் பரந்தாமனைக் காண நேரும் போதெல்லாம் உலக ஊழியரின் உள்ளம் வருந்தாம லிருக்காது. ஏன் அவர் வருந்தவேண்டும்? அவனுக்கு அவரென்ன உறவா? அதுவுமில்லையே!

அரசுத்துறையில் பணியாற்றிய உலக ஊழியர் ஓய்வு பெற்று ஆறு ஆண்டுகளிருக்கும். திருவைகுந்தம் என்னு மூரில் பொதுமக்களிடம் அவருக்கு நல்ல மதிப்புண்டு. இயல்பாகவே உயிர்களிடத்தில் இரக்கப்பண்புடையவர் அவர். ஊரிலே நடக்கும் பொதுநிகழ்ச்சிகளில் அவருக்குச் சிறப்பிடம் கொடுப்பார்கள். கூட்டங்களிலே அவர் பேச வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் வள்ள லாரைப்பற்றியும் காந்தியடிகளைப்பற்றியும் குறிப்பிடாம லிருக்கமாட்டார். அறநெறியே அவர் பாதை; அன் புடைமையே அவருக்கு அணிகலன்; அவருடைய வெள்ளிப் பூணிட்ட கைத்தடிக்குக்கூடப் பொதுநெறிக் கண்ணோட்டம் உண்டு! உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களைத் தவிர வேறு மயக்கப்பொருள்களைக் கண்டாலே வெறுப்புத் தோன்றும் அவருக்கு. கோவில் வழிபாடென்றால் அவருடைய ஆர்வம் முந்தி நிற்கும்.

அன்று கோவிலில் திருவிழா. உலக ஊழியரும் வழிபாட்டுக்குச் சென்றார். பரந்தாமனும் அவன் நண்பர் களும் படையெடுத்து வருவதுபோல வந்தார்கள். ஒருவர் தோள்மேல் ஒருவர் கைபோட்டுக்கொண்டும் 'கல்'லெனச்

சிரித்துக் கொட்டமடித்துக்கொண்டும் அவர்கள் கோவிலையே மறந்து வந்ததைக் கண்டு யார்தாம் அஞ்சி விலகமாட்டார்கள்! கோபுரவாயிலிலே அவர்கள் வெண் சுருட்டைப் புகைத்து ஊதிவிட்டுக்கொண்டு நின்று உள்ளே போகும் நேரத்திலே பரந்தாமனின் கையிலிருந்து விழுந்த வெண்சுருட்டைக் கண்டார் உலக ஊழியர். இந்தப் பார்வை இவரை வாட்டியது, புகைபிடித்தவரின் உள்ளுறுப்புகளை வெப்பம் வாட்டுவதுபோல. பரந் தாமனும் இவரைக் கண்டபோது சிறிது அதிர்ச்சியடைந்து தானிருப்பான்; இப் பெரியவர் தன் வீட்டிலே சொல்லி விட்டால் என்னசெய்வது என்று அவனுக்கு அச்சம்.

எப்படியோ உள்ளே சென்று திருக்கோலங்கொண்ட இறைவனைச் சேவித்துவிட்டு வீட்டுக்கு மீண்டார் உலக ஊழியர். இருக்கையிலே அமர்ந்தபோது கோவிலிலே கண்ட அந்தக் காட்சி இவரது நெஞ்சை அமுக்கி வருத்தியது.

"அட, கடவுளே! கடைத்தெருவிலே சந்து பொந்து களிலேதாம் இவர்களின் ஆரவாரக் கூட்டமென்றால் இந்தத் தூய தெய்வத் திருவிடத்திலுமா வந்து அடக்க மின்றி அருவருக்கும் தோற்றத்தைக் காட்டவேண்டும்? நாகரிகம் எங்கே? உள்ளத்திலேயா? உடம்பிலேயா? இவர்கள் அணிந்துவரும் ஆடைகளைப் பார்! ஆண்களா பெண்களா என்றே விரைவில் தெரிந்துகொள்ள இயல வில்லையே! ஆடைகளெல்லாம் பெண்கள் வீட்டுவாயிலிலே போடுகின்ற கோலங்களைப்போல இருந்தாற்கூடப் பரவா யில்லை; கோவிற் சுவரின் பட்டைகளைப்போலல்லவா இருக்கின்றன! இன்னும் இவர்களின் தலையைப் பார்! பின்னிமுடிய மறந்ததுபோலிருக்கிறதே. தலைமட்டுமா!

கன்னத்திலே மயிர்க்கால் இறங்கவிட்டு மீசையை உதைக்கும்படியல்லவா விட்டிருக்கிறார்கள்! அந்தோ! இந்த அவலக் கோலங்களையெல்லாம் யார் கற்பித்தார்கள்? இவர்களின் அப்பன் பாட்டன்பார்களா? இல்லை-இல்லை; எல்லாம் இன்றைய இறக்குமதித் திரைப்படக்காட்சிகளைக் கண்டதன் பயனே! பிழைப்புக்காக நடிகர்கள் வேண்டு மானால் இப்படி நடித்துவிட்டுப்போகட்டும். மக்களோடு கூடிப்பழகவேண்டிய இளைஞர்களுமா இப்படி உடம்பைக் காட்டி நடமாடவேண்டும்? படித்தவர்கள் எது நாகரிக மென்று எண்ணிப் பார்க்க வேண்டாவா? உள்ளத்தைப் பண்படுத்தவேண்டிய இளமைப்பருவம் நடிப்புலகால் பாழாகலாமா?"

உலக ஊழியர் புலம்பிய இந்த மொழிகள் அடுத்த அறையிலே படித்துக்கொண்டிருந்த பேரன் தமிழ் மணியின் செவிகளிலே விழுந்தன. என்றுமில்லாத நிலையில் தாத்தா இப்படிப் பேசியது அவனை உருட்டி யுருட்டி விழிக்கச் செய்தது. பண்புடைய அவனும் தனக்கு எச்சரிக்கையாக அந்த மொழிகளைக் கொண்டான்.

பெரியவரின் புலம்பல் இன்னும் ஓயவில்லை. "அந்தப் பயல்கள்தாம் அப்படித் திரிகிறார்களென்றால் இந்தப் பரந்தாமனுமா கெடவேண்டும்? எப்படி யிருந்தவன இப்படியாகிவிட்டான்! சூலம்போல நெற்றி யிலே பளிச் சென்று திருமண்ணிட்டிருப்பவன் இன்று அதையும் இட்டுக்கொண்டு கையிலே வெண்சுருட்டையும் பிடித்திருக்கிறானே! நான் பார்த்தபோது, விரைவாக வாயிலிருந்த கொள்ளிக் குச்சியை எடுத்ததும் அஃது உதிர்ந்து மீசையையே சுட்டு எரிக்கப் பார்த்ததே! இவனும் சேர்ந்துகொண்டு கோவிலுக்குள் வண்ண

முடைய பலரை அங்கங்கே கண்டு கைகளை வீசி இடித்துச் சென்றதை நான் பார்த்தபோது, இதற்காகவா இவனைப் பெற்றோர்கள் பெற்றுவிட்டார்கள்? என்ன கொடுமை! ஐயோ! எல்லாம் தீய திரைப்படம் பார்த்ததன் விளைவே. குடும்பத்திலே தலைமையேற்க வேண்டிய இவர்கள் பொருத்தமற்றவர்களாகத் தலையெடுக்கிறார்களே; ஆடையைக் குறைக்கின்றார்கள்; அழகைக் கெடுக்கின்றார்கள். இவர்களை எப்படித் திருத்துவது? ஆண்டவனே இவர்களைத் தடுத்துக் காக்கவேண்டும். இவன் அம்மாவிடத்திலே சொல்லட்டுமா? சொன்னால் அழுது நொந்து விடுவாளே இன்னும் கொஞ்சம் பார்ப்போம்."

தொடர்ந்து துன்பத்தை இங்ஙனம் வெளிப்படுத்தினார்.

பரந்தாமனும் கெடப்போவதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் இதற்கு முன்னெல்லாம் சீர்திருத்தச் செம்மலைப்போலப் பேசுவான்; ஆண்டவன் படைப்பிலே ஏற்றத்தாழ்வு செய்து பேசுவோரைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது; தன் வீட்டிலுள்ள "ஆசாரக்குடுக்கை"களின் முனைப்பான பேச்சைக் கேட்கும்போதெல்லாம் அவன் நெஞ்சம் குமுறாமல் இருந்ததில்லை; வெடித்துப் பேசுவான். கோவிலிலே வேலை செய்கின்ற தன் தந்தையைப் போலவே அடக்கமாக இருந்தவன். அத்தகையவனாய் அவன் நடந்துவந்ததால்தான் அவனிடம் உலக ஊழியருக்குப் பற்றுதல் ஏற்பட்டது. எவ்வளவோ உதவிகளையும் அவர் அவனுக்குச் செய்திருக்கிறார். அதனால் அவனைக் கண்டித்துக்கூற அவருக்கு உரிமையும் இருந்தது. மறுநாள் அவனைக் கூப்பிட்டு அறிவுறுத்த நினைத்தார்.

மறுநாள் காலையில் உலக ஊழியர் தம் வீட்டு நாற்காலியில் அமர்ந்திருந்தார். கையிலே அருட்பா நூலிருந்தது. அந்த நேரத்தில் பரந்தாமன் ஆற்றிலே குளித்துவிட்டு அந்தப் போலிப் படையோடு வந்தான். படையைக் கண்டதுமே கூடுதலாக அவருக்கு எரிச்சலே வந்தது. எனினும் அவனைப் பார்த்த அவர், "அடே, பரந்தாமா! இங்கே வா" என்றதும் உடனே வந்து நின்றான். அத்தனையும் கொட்டிக் கூறிவிட வேண்டும் போலிருந்தது அவருக்கு. பையன் ஈரவேட்டி யோடு இருக்கிறானே—போய் ஆடையை மாற்றி வரட்டு மென்று இரக்கப்பட்டார் அவர். பரந்தாமனும் அடுத்த வீட்டுப் பையன்தானே, உடனே போய் வந்துவிட்டான். பெரியவர் தன்னை இவ்வளவு அக்கறையுடன் கூப்பிட்ட தன் நோக்கத்தை அவன் புரிந்திருந்தான்.

"பரந்தாமா! உன்னை எவ்வளவோ நம்பியிருந்தேன். ஆனால், உன்னைப்பற்றிச் சிலர் வந்து கூறியதைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. நேற்று நானே கண்ட போதுதான் உன் நடத்தை என்னை உறுத்தியது. நாட்டிலே சொல்லொன்று செயலொன்றாக நடப்பவரைக் கனவிலே காணலும் பெருந்துன்பம் என்று வள்ளுவர் பெருமான் சொன்னார். அந்த நிலைக்கு நீ வந்துவிட்டாயா? ஒழுக்கத்தினாலேதான் ஒருவன் மேன்மையடைய முடியும்? 'போச்சுது போச்சுது பாரத நாடு' என்று நாகரிகப் பண்பற்றவர்களைப் பார்த்துத்தானே நம் பாரதியாரும் பதைத்ததை நீ உணரவில்லையா? மனிதனின் உயிர் போனாலும் போகலாம்; பண்பாடுமட்டும் அழியக்கூடாது. கோவில் எதற்கு? கடவுளைக்கண்டு வழிபடவா? சிரித்துக் கேலிசெய்து கொட்டமடிக்கவா? செல்வச் செருக்காலும் அறியாமையாலும் மக்கள் பணிவின்றியும் ஒரு குறிக்

கோளின்றியும் திரிவதை எண்ணியெண்ணி வருந்தினுரே வடலூர்ப்பெருமான்; அந்த வருத்தம் உங்களைப் போன்றவர்களாலே ஏற்பட்டதுதானு? அவர் தம் கையை வீசி நடப்பதற்கும் கூசினுரே; அதனைக் கேள்விப்பட்டிருக்கிருயா? அழிந்துபோகிற உடம்பை—அதிலே தொத்திக்கொண்டிருக்கிற அழகை வெளியிலே காட்டிட அஞ்சி உடம்பெல்லாம் துணியால் போர்த்திக்கொண்டிருக்கிருரே அவர்; இன்னும் இவ்வுலகில் பிறருடைய ஒப்பனைகளையும் மினுக்குகளையும் நடக்கின்ற நெளி நடைகளையும் கொஞ்சங்கூட மனஞ்செலுத்திப் பார்க்கவில்லையென்றும் பார்க்கநேர்ந்தால் மிகுதியும் அஞ்சி நடுங்குவேன் என்றும் அவர் பாடிவைத்திருக்கிருரே அதுவும் உனக்குத் தெரியாதா? பரந்தாமா! ஒழுக்கங்கெட்ட இந்த உலகை நினைந்துதான் அந்த அகக்கண்பெற்ற அருளாளர் முறையிட்டுக் கூறியிருக்கிருர்! அந்தப் பாட்டைப் படிக்கிறேன்; கேள்!

கையுற வீசி நடப்பதை நாணிக்
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்
வையமேற் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே! சிறிதும்
பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்.

இந்த அருட்பா உன்னைத் திருத்திவிடுமென்று நம்புகிறேன். இஃது உன் செவிகளிலே எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கவேண்டும். இனிமேல் நீ அந்தக் கரும்படையோடு சேராதே! அவர்களை உன் சொல்லாற்ற

லால் திருத்தி நன்னெறிக்குக் கொண்டுவர முடியுமானல் அதையும் செய்க! எல்லாரும் வாழ்வின் உண்மை யுணர்ந்து நல்லதையே செய்து நாகரிகமாக வாழ வேண்டும். உன்னுடைய அறிவும் ஒழுக்கமும் வள்ளற் பெருமானின் பொதுநெறி பரப்பும் தொண்டுக்குப் பயன்படவேண்டும். உன்னை அதற்கு ஆளாக்கிக்கொள்ள அருட்பாநெறியை நன்கு கற்றுப் பண்படுத்திக்கொள்! 'வடலூர்த் தொண்டன்' என்னும் பணி கிடைக்க வடலூர்ப் பொதுநெறிக் கழகத்துக்குப் பரிந்துரைசெய்து எழுதுவேன். நீ அப்பணியால் முன்னேறலாம்."

கண்கள் பனிக்க அன்பிலே தோய்ந்து வந்த உலக ஊழியரின் இந்த அறிவுரை பரந்தாமனின் நெஞ்சினை ஈர்த்து உருகவைத்தது. அவன் கண்களும் நன்றி மாலை சூட்டுவதுபோல அப் பெரியவரின் நம்பிக்கைக்கு மாலை யிட்டன. அவன் அவரடிகளிலே வீழ்ந்தான். வாயும் மன்னிப்பு வேண்டியது.

"என் வணக்கத்திற்குரிய பெருமானே! என்னை மன்னித்துவிடுங்கள். நான் திருந்திவிட்டேன். என்னை இனி எந்தத் தீயும் தீண்டாது. வள்ளற்பெருமான் அருளிய சுடர்விளக்கை இதோ கையிலே ஏந்திவிட்டேன். கவலை வேண்டா. தங்கள் அன்பு அடியேனுக்கு என்றும் வேண்டும்!"

இங்ஙனம் வேண்டிநின்ற பரந்தாமனைப் பெரியவர் வாழ்த்தி நின்ருர்!

---

7. வட்டி வாங்கிய கண்ணீர்

"வட்டிக்கடை வன்னியாண்டி" யென்றால் மதுரை யூரிலே தெரியாதவர் யாருமே இருக்கமாட்டார். அத்தனை விளம்பரம். தெற்கு ஆவணி மூல வீதியிலே அவருடைய 'தங்க மாளிகை' யுண்டு. அது கோபுரம்போல உயர்ந்து நின்று வருவாரையெல்லாம் அழைக்கத் தவறாது.

கடைக்குள்ளே புகுந்தோமென்றால் தங்கக் கட்டிகளும் வைரமணிகளும் கண்சிமிட்டுவதுபோல ஒளி வீசுவது தூய அன்பர்களின் நெஞ்சம்போலத் தோன்றும். அணி கலன்களைத் தாங்கி நிற்கும் கண்ணாடிப் பேழைகளின் நடுவே முதலாளி வன்னியாண்டி அமர்ந்திருப்பார். பணப்பெட்டியின்மேலே ஒரு கையைப்போட்டுக்கொண்டும் உடலையசைத்துக்கொண்டும் மற்றொரு கையிலே விசிறியைப் பிடித்துக் கொண்டும் இருக்கின்ற அவர் காட்சி எல்லாரையுமே சிந்திக்க வைக்கும். அவரது உதட்டிலே படிந்துள்ள வெற்றிலைக் காவிக்கும் நெற்றிச் சந்தனப் பொட்டுக்கும் தனிக்கவர்ச்சி யுண்டு.

கடையிலேதான் கண்ணாடிப் பேழைகளுக்கு அள வில்லையென்றால் வீட்டிலும் அப்படியா? எத்தனை பணப் பெட்டி! எத்தனை நகைப்பெட்டி! அடுக்கடுக்காகச் செங்கற் சூளைபோலல்லவா உள்ளன? இவர் மேலூரி லிருந்து இந்த மதுரைக்கு வந்து சில ஆண்டுகள்தாமே ஆகின்றன? அதற்குள் இவ்வளவு பணப்பெருக்கமும் செழிப்பும் எப்படி வந்தன? கள்ளப்பணமா? கறுப்புப் பணமா? அப்படியும் தெரியவில்லையே!

வீட்டிலே இவருடைய மனைவி கழுத்திலும் காதிலும் அணிந்திருக்கும் நகைகளோ விலைமதிக்க முடியாதவை. குழந்தை குட்டிகளுக்கும் குறைவில்லை. அவர்கள் செல விற்குக் காரணராகத் தோன்றினாலும் செல்வம் குறைய வில்லையே! குளத்திலே கொடிகளாய்ப் படர்ந்து மலர்கின்ற கொட்டியைப்போலவன்றோ இவருடைய சுற்றம் தழுவிய குடும்பம் உள்ளது?''

இப்படியெல்லாம் எண்ணியவர் வேறு யாருமில்லை; வன்னியாண்டியின் பழைய நண்பன் கடம்பவாணன்தான். ஒருநாள் மதுரைக்கு வந்தபோது புதிய வாழ்விலே திளைக் கின்ற தன் நண்பரைக் காணும் ஆசையால் சென்று கண்டான். புதிய மனிதராகப்போன வன்னி பழைய நண்பனை மறக்கவில்லை; நன்கு உரையாடி இனிய உணவு அளித்தார். அப்போதுதான் இவருடைய வணிகம், வாழ்வு யாவற்றையும் முழுமையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. முன்னமே இவருடைய வட்டிக் கொடுமையைப் பற்றியும் கஞ்சத்தன்மையைப் பற்றியும் கேள்விப் பட்டிருந்தான்.

"வன்னியாண்டி இருக்கிறானே அவன் இப்பொழுது ஆண்டியில்லை. பெரிய செல்வன். ஓர் ஆண்டுக்கு ஒரு நூறு ரூபாவுக்கு வட்டி எவ்வளவு வாங்குகிறான் தெரியுமா? நூற்றிருபது ரூபா. என்ன கொடுமை பார்த்தாயா! அதனாலேதான் அவன் அப்படியாகி யிருக்கிறான். நேர்மையாக உழைத்தோ குறைந்த ஊதியத்துக்கு விற்பனை செய்தோ நடந்திருந்தால் இவ்வளவு பெரிய செல்வனாக ஆகியிருக்க முடியாதே! இருப்பினும் இந்தச் செல்வம் எங்கே நிலைக்கப்போகிறது? இவனுக்கு வாய்த்த பிள்ளைகளாலேயே அழியப்போகிறது! இப்போதே

ஒருவன் சூதாடி; ஒருவன் கள்குடியன்; இன்னொருவன் வெறும் பகட்டுக்காகச் செலவு செய்யும் ஊதாரி.

"வள்ளி இவ்வளவு பணம் படைத்திருந்தும் நெஞ்சம் இரங்கி ஏழைகளுக்கு ஒரு பொருளைக் கொடுத்துவிட மாட்டான். அவர்களைக் காணக்கூடக் கண் கூசும். கடைக்கு ஏங்கிவரும் ஏழைக்கு ஒரு காசுதான் போடுவான். மற்றோர் ஏழைவந்தால் மனம் மடங்கிவிடும்; கையைக் காட்டிப் போகவைத்துவிடுவான். வீட்டிலே அவர் மனைவி யிருக்கிறாளே அவளும் இப்படித்தான்; அறுத்த கைக்குச் சுண்ணாம்பு தரமாட்டாள்; பழைய கஞ்சியைக்கூட இரக்கப்பட்டுக் கொடுக்கமாட்டாள். இப்படிப்பட்டவர் களுக்குத்தான், கடம்பு! பணம் சேருகிறது. கடவுளும் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறானே!"

கடம்பவாணன் நினைவுக்கு இவ்வாறு வருந்திக் கூறிய செய்திகள் வந்தன. பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமைப்படாத அருளுள்ளம் படைத்தவன் அவன். அத்தகையவனுக்கு வள்ளியாண்டியின் வட்டி வாழ்வு பிடிக்கவில்லை. சிறிதுநேரம் சிந்தித்தான்.

'பணம் வாழ்க்கைக்கு மிகமிகத் தேவைதான். அதற் காகப் பிறருடைய வயிற்றெரிச்சலோடு முதலுக்கும் மேலான கொடிய வட்டியை வாங்குவதா? அப்படி வாங்கிக் கோட்டைகட்டி வாழ்ந்து இறுதியில் கொண்டு போவது எதனை? ஒரு பொருளும் கூட வரப்போவது இல்லையே! கொடிய வட்டிவாங்கிய பழிமட்டும் உயிரோடு சேர்ந்து சென்று தீவினைப் பயனாகிய தீயபிறவியை யல்லவா கொடுக்கப் போகிறது! இந்த உண்மையை எவன்தான் சிந்திக்கிறான்? சிந்தித்தால் போதுமென்ற

மனத்துடன் அமைந்து பொருளை நேர்மையற்ற வழிகளிலே ஈட்டுவானா ?'

சிந்தனையில் ஆழ்ந்த அவனுக்கு வழக்கம்போலத் துன்பமே ஏற்பட்டது. இப்படித் துன்பப்படும்போதெல்லாம் அருட்பா வடிவிலுள்ள வள்ளலாரைக் கண்டு உரையாடும் அவன் கையிலே கொண்டுவந்திருந்த அருட்பாவைப் புரட்டிப்பார்த்தான்.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத்து ஆள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்டு ஒட்டியுள் ளிருந்தீர்
பட்டினி கிடப்போரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி யாயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

இந்தப் பாட்டு அவனுக்குக் கைகொடுத்தது. இதனைக் கொண்டு வன்னியாண்டியின் வட்டிக்கொடுமையைப் போக்கிவிடக் கருதினான். வன்னியளித்த விருந்துண்டு வீட்டிலே தங்கியிருந்த அவன், மாலையில் வன்னி யாண்டியைத் தனியே கண்டு தன் எண்ணத்தைக் கூறினான்.

"நண்பரே! பல ஆண்டுகளுக்குப் பின் உம்மைக் காணும் பேறுபெற்றேன்; விருந்தும் உண்டேன். மகிழ்ச்சி! உமக்கு இச்சமயம் ஒன்றைக்கூற விரும்புகிறேன். வள்ளலாரின் அருள்நெறியிலே வாழும் நான் இதனைக் கூறாமல் செல்லமுடியவில்லை. நீர் மக்களின் கண்ணீரைக் கண்டும் கொடிய முறையிலே வட்டிவாங்கிப்

பணம் சேர்த்திருக்கிறீர்; அருளெண்ணம் சிறிதுமில்லை. வாழ்க்கைக்கு என்றும் துணைசெய்கிற அறத்தின் பயனாகிய வட்டியைப் பெற்று அதை வளர்த்துக்கொள்ளும் அறிவையும் பெறவில்லை. பணத்திலே பித்துக்கொள்வதோ தம் மனைவி மக்களோடு ஒட்டியிருந்து இன்புறுவதோ வாழ்வாகிவிடாது. மனிதன் பிறரையும் வாழவைப்பது தான் வாழ்வாகும். ஆதலால் நீர் இனிமேல் நேர்மையான வாழ்வே வாழவேண்டும். இதுவே வள்ளற் பெருமானின் பொதுநெறியாகும்.

"பொதுநெறிபூத்த இளைய உலகம் புறப்படப் போகிறது; கொடுமைகளைச் சாடியழிக்கப் போகிறது. இதனை இப்போதே உணரும்! இதோ அருட்பா நூல். வைத்துக்கொண்டு நாள்தோறும் படித்துத் திருந்தும்! என்றும் புகழ்தரும் வாழ்விலே எண்ணத்தைச் செலுத்தும்."

இந்த உரையைக் கேட்டவாறு அருட்பா நூலை அன்புடன் கையிலே வாங்கிய வன்னியாண்டி தம்மைத் திருத்திக் கொள்வதாகக் கூறி வணங்கினர்.

அந்த நம்பிக்கையோடு கடம்பவாணன் மேலூரை நோக்கி நடந்தான்!

———

8. ‘தெய்வ வெங்கோயில்’

வள்ளலார் படைத்த ‘பொதுநெறி யெனும் வான்புத் தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்க’ப் பெருநெறியிலே பற்றுக்கொண்டு ஊறித் திளைத்த பேச்சுமுத்தன் தன் பெயரையே மாற்றி, ‘வள்ளலாரடியான்’ என்று அமைத்துக் கொண்டவன். திருப்பெருந்துறையூரிலே வள்ளற் பெருமான் திருப்பெயரில் ஒரு மணிமன்றம் அமைத்து அவருடைய கொள்கைகளை யெல்லாம் மக்கள் நெஞ்சிலே பரப்பிவந்தானவன்; மன்றத்திலும் பிற பொதுவிடங் களிலும் உயிரையுருக்கும் அருட்பாத் தொடர்களை எழுதி வைத்துப் பார்ப்பவர் உள்ளங்களிலே பதியவைத்தான். தைப்பூச நன்னாள் வந்துவிட்டாற் போதும்; வள்ள லாருக்குப் பெருவிழாச் செய்வதிலே பேரார்வங் கொண்டு ஊரையே அருட்கோலம் பூணச்செய்து விடுவான். அன்று அவன் அகம் மலர்ந்து அற்றார்க்கும் அலந்தார்க்கும் உணவளிக்கும் அறக்காட்சியை ஆண்டவனே வந்து கண்டருள்வானோ வென்று அன்பர்கள் வியப்படை வார்கள்.

இத்தகைய தொண்டனுக்குப் பெற்றோர்களில்லா விடினும் அவர்கள் சேர்த்து வைத்தபொருள் நிறைய விருந்தது. அப்பொருள் முழுதையும் வள்ளலாரின் பொதுநெறிக் கொள்கையை வளர்ப்பதற்காகவே செல விடத் திட்டமிட்டான். ஒழுக்கமற்றவரையும் அரசுத் துறைகளிலே ஊழல் புரிவோரையும் கண்டால் அவன் பொறுக்கமாட்டான்; அறம் பாடி அவர்களையே அழித்தா லென்னவென்று நினைப்பான்.

ஒருநாள் உலகவர் செய்யும் தீமைகளை யெல்லாம்— சாதிச்சண்டை, சமயச்சண்டைகளை யெல்லாம் எண்ணி யெண்ணி உள்ளம் நொந்தான். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் வள்ளற்பெருமானைப்போல் ஒரு பெரியார் தோன்றி நன்மையருளக் கூடாதா? என்று ஏங்கி யிளைத்திருந்தான். அவ்வமயம் எதிர்பாராத கடித மொன்று வரப்பெற்றுப் பிரித்துப்பார்த்தான்.

என் ஆருயிர் நண்பா!

உன் உள்ளத்தை வணங்குகின்றேன்; வாழ்த்து கின்றேன். நீண்டகாலத்திற்குப்பின் உனக்குக் கடிதம் எழுத நேர்ந்த காரணத்தால் என்னுயிர் மகிழ்கிறது.

நீ வள்ளற்பெருமான் கண்ட பொதுநெறிக் கருத்து களைப் பரப்புவதோடு அவருக்குப் பெரிய விழாவெடுத்த செய்திகளையும் நாளிதழ்களிற்கண்டு உவகையுற்றேன். மதுரையில் இராமலிங்கர் நன்னெறிக் கல்லூரியிற் பயின்ற நம்மில் நீயே கொடுத்துவைத்தவன். மக்களின் மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்தும் பொய்மாயப் போலிச் சமயங்களை வெறுத்தும் உண்மையான கடவுட் கொள்கையைப் பரப்புவதிலே நீ முனைந்திருப்பதைப் பாராட்டுகின்றேன். உன்னைப்போல் நானும் தொண் டாற்ற ஆர்வங் கொண்டுள்ளேன்.

உனக்கொரு நற்செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். எங்கள் மாவட்டத்தில் மட்டுமல்லாமல் வேறு பல மாவட்டங்களிலும் மாநிலங்களிலும் வடலூர்ப் பெருந்தகையின் வான்பெருங் கொள்கைகளைச் செயல் படுத்தி அருட்பேரொளியைக் காட்டிவரும் ஒப்பற்ற பெரியாரைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ என்னவோ? அப் பெரியவரின் பெயர் வல்லநாட்டுச்

சித்தர் என்பதாகும். அவரை—அவருடைய ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒழுக்கத்தாலே வள்ளலாரின் மறுபிறப்பு என்றுகூட வியந்துபோற்றி வணங்குகின்றனர். அன்னாரை நீ ஒருமுறை வந்து கண்டுவிட்டால் மீள மாட்டாய்! வருவாயா? மறுமொழி தருவாயா?

இப்படிக்கு
உன் அறிவிற்கலந்த
அன்பரசன்

மாசி - 10 ஆம் நாள்,
பாளையங்கோட்டை.

வாடிய பயிருக்கு மழைபோல்வந்த பழைய நண்பனின் இந்தக் கடிதத்தைப் படித்து முடித்த வள்ளலாரடியானுக்கு இருப்புக்கொள்ளவில்லை; துள்ளிக்குதித்தான். அந்தக் கண்கண்ட வள்ளற்பெருமானைக் காண்பேன்; கண்டு என் நோவெல்லாம் தீர்ப்பேன் என்று கூறிய அவன் பாளையங்கோட்டையை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்!

மறுநாட் காலை ஒன்பது மணி. அரசுப் பேருந்தில் வந்திறங்கிய வள்ளலாரடியான் பாளையங்கோட்டைப் பெருமாள் வடக்குத் தேர்த்தெருவிலுள்ள அன்பரசனின் இல்லத்தை யடைந்தான். அலுவலகத்திற்குச் செல்ல ஆயத்தமான அன்பரசன் பழைய நண்பனின் குரல்கேட்டு உள்ளமும் உடலும் குளிர்ந்து குலுங்கிப் போனான் கடிதத்தை யெதிர்பார்த்த அவன் நண்பனையே எதிரிற் கண்டதும் கட்டித் தழுவி அன்பைப் பொழிந்தான்.

கல்லூரி நண்பனை—உயர்நெறியாளனை முதன் முதலிற் கண்ட அவனுடைய இல்லம் பெருமை முகங் கொண்டு விளங்கியது. நண்பனுடன் உரையாடி மகிழவும் அவனுக்கு விருந்து செய்யவும்வேண்டி அன்று அலுவல கத்திற்கு விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டான்.

அன்பு வரவேற்பிலும் காலைச் சிற்றுண்டியிலும் மூழ்கித்திணறிய வள்ளலாரடியான் தான் வந்த கவனத்திற்குத் திரும்பினான்.

அன்பரசனும் பழைய நினைவுரைகளையெல்லாம் விட்டுவிட்டு நண்பனின் அருள்வேட்கைக்கு அமுதுரை பகர்ந்தான் :

" நண்பா! இன்று உனக்கொரு வேட்டை; அதை நான்கூட நினைத்துப் பார்க்கவில்லை."

" அஃது என்ன வேட்டையப்பா? சொல்லு, உடனே."

" அதுதான்....நம் வல்லநாட்டுச்சித்தர் இவ்வூர் மனகாவலன்நகரில் மாலையில் ஆயிரத்தெட்டு விளக்கேற்றி அருட்பேரொளி வழிபாடு செய்யப்போகிறார்கள்."

" ஆ! அப்படியா? இங்கேயே அப் பெருமானைக் கண்டுவிடலாமல்லவா! அது நான்பெற்ற பேறுதான்."

மாலை நேரத்தை ஆசையோடு நோக்கிக்கொண்டிருந்த நண்பரிருவரும் ஐந்துமணி யானதுமே மனகாவலன் நகரைக் காணச் சென்றார்கள். ஏழையெளியவர்கள் வாழ்கின்ற அந்தக் குடிசைப் பகுதியைக் கண்ட வள்ளலாரடியானுக்கு இரக்கவுணர்ச்சி பொங்கி வந்தது. அருட்பேரொளி வழிபாடு நிகழும் இல்லத்திற்கு முன் பெரிய பந்தலிடப்பட்டிருந்தது; பகட்டும் பளபளப்புமில்லாமல் பாங்காக மாவிலை தோரணங்கள் அங்கே அழகு செய்தன. தெய்வப் பொதுநெறிச் சடங்கு வழிபாட்டிலே ஈடுபாடுகொண்ட அவ்வூர் நூலாலை உரிமையாளர் வடிவேலுப்பெரியார் இல்லத்தின் பெருங்கூடத்தில்தான் அவ்வேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உள்ளே ஓராள் உயர அருட்பெருஞ்சுடர்க் குத்து விளக்கு ஆருயிர்க்கு நிகராக அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் எண்கோணவடிவில் மனித உள்ளத்தைக் காட்டுவதுபோலப் பலவிடங்களில் கோல மிட்டு ஆயிரத்தெட்டுத் திரியிட்ட அகல்கள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

வள்ளலாரடியான் இவற்றையெல்லாம் கண்டு கண்டு உள்ளமுருகியவனாய் வியப்புமேலிட்டு நண்பருடன் உள்ளே சென்றான். அவனுக்கு இங்கே வடலூர் சத்திய ஞானசபை நினைவில் தோற்றமளித்தது!

அடுத்தவோரிடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நடுவிலே வல்லநாட்டுச் சித்தர்பெருமான் அமர்ந்திருக்கக், கண்ட இருவரும் கைகளைத் தலைமேல் கூப்பியவாறே அருகிலே சென்றனர்.

தம்மிடம் வருவாரையெல்லாம் ஒரு நிகராய் வணங்கி, "வாருங்கள் ஐயா!" என்று கூறி அன்புயர வரவேற்கும் அப்பெருமான் இவர்களைக் கண்டதும் எழுந்து நின்று "வணக்கம், வணக்கம்—வாருங்கள்" என்று கூறிக் கூப்பிய கைகளை யெடுக்காமலிருந்தார்.

சித்தர் பெருமானின் இந்த வணங்கிய காட்சி வள்ளலாரடியானை ஈர்த்துக் கண்ணீர்மல்க வைத்ததோடு அவனுடைய திருவடிகளில் விழுந்து வணங்கித் தொட்டுக் கண்களிலே ஒற்றிக்கொள்ளவும் வைத்தது. தொட்ட உணர்ச்சியால் மெய்கூசிய பெருமான் அவனுடைய கைகளை அப்படியே பிடித்துக்கொண்டு "கூடாது, கூடாது" என்று தடுத்தார்.

அப்பொழுது பக்கத்தில் நின்ற அன்பரசன் சித்தரிடம் அவனை அறிமுகஞ்செய்து வைத்ததுடன் அவனுடைய கொள்கையையும் செயலையும் எடுத்துக் கூறினன்.

பெருமகிழ்ச்சியடைந்து கேட்ட அப் பெருமான் அவனைக் கூர்ந்து பார்த்து அருள் பாய்ச்சியபோது எல்லாருமே ஏக்கப் பெருமூச்சுவிட்டனர். சித்தர் அவனிடம் கூறினர் :

"தம்பி! உன்னைப்போல் கைம்மாறு கருதாமல் அருட்பெருநெறியை வளர்க்கின்ற இளைஞர்படைதான் இன்று நாட்டுக்குத் தேவை. நீ இறவாத இன்ப வாழ்வு வாழ்வாய். உன்னல் வள்ளற்பெருமானின் பொதுநெறி வளரும். இப்போது நீ இந்த அருட்சுடர் வழிபாட்டையும் ஆருயிர்த் தொண்டையும் இருந்து கண்டு செல்க!"

வாழ்வில் இதுகாறும் பெருத இந்த அருளுரை வள்ளலாரடியானைப் பேரின்பவுலகிற்கே இழுத்துச் சென்று விட்டது. மயங்கித் தெளிந்த அவன் மீண்டும் அவரை வணங்கியவாறே அருகிலமர்ந்தான், நண்பனேடு.

ஆறு மணிக்கெல்லாம் அங்கே அருட்பா அகவல் முழக்கம் செவிகளிலே தேன் பாய்ச்சியது. அருட்பெருஞ் சுடர்க்குத்துவிளக்கினைச் சித்தர் பெருமான் முதலில் ஏற்றி வைத்தார். தொண்டர்கள் மற்ற அகல் விளக்குகளை ஏற்றினர்கள். எங்கணும் ஒளிமயம்! அருட்பெருஞ்சுடராம் ஆண்டவன் இங்கே கோவில் கொண்டான்! மக்கள் வெள்ளம் அலையொடுங்கிச் சூழ்ந்து பரவிச் சுற்றி நின்றது. இங்கே 'மதித்த சமய மத வழக்கெல்லாம் மாய்ந்தது; வருணச்சிரமம் எனும் மயக்கமும் சாய்ந்தது;

கொதித்த லோக ஆசாரக் குதிப்பெல்லாம் ஒழிந்தது; கொலையும் களவும் மறைப்புலையும் அழிந்தது!' ஆம்; இங்கே அருள்பெறத் தடையாகும் சாதிக் கொடுமை இல்லை; குறுகிய ஒரு சமயக் கோட்பாடுமில்லை. பொது நெறி யொன்றே பூத்தது! எல்லோரும் அகத்திலும் முகத்திலும் அருட்சுடரை யேந்திக் களித்தனர்.

சுடர்வழிபாடு முடிந்ததும் சித்தர்பெருமான் தம்மை நோக்கி வந்த நோயாளிகளுக்கு இனியவுரையோடு ஏற்ற மருந்துகளைக் கொடுத்தருளினர். பின்னர் ஏழைகளுக் கெல்லாம் பெருஞ்சோறு அளித்தருளினர். வழக்கம் போல இந்த இருபெரும் ஆறுதலை யளித்துவிட்ட பெருமான் முடிவில் எல்லோருக்குமாக ஓர் அருளுரை வழங்கியருளினர்:

"வணக்கத்திற்குரிய ஆருயிர் அன்பர்களே! நீங்க ளெல்லோரும் இப்போது அருட்பெருஞ்சுடராம் ஆண்ட வனைத் தொழுது இன்புற்றீர்கள். மனிதப் பிறவி மாசு நீங்கி மாண்பையடைய வேண்டுமானால் வேற்றுமையின்றி யெல்லாரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை கொள்ள வேண்டும். இதுவே ஆண்டவனருளைப் பெற உயர்ந்த வழியாகும். இந்த நாட்டிலே தோன்றிய சமயத்தவர்கள் சமய அருட்பண்பை மறந்து ஆருயிர்த் தொண்டைச் செய்யாமையாலேதான் சமய நெறிகள் அழிந்துவிட்டன. இந்த உண்மையை உணர்ந்த நம் வடலூர் வள்ளற் பெருமான் ஆருயிர் வழிபாட்டை முதலில் வலியுறுத்தினர்.

'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் யாரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும்'

என்று அவர் பாடியருளியதை இங்கே உணரவேண்டும். இந்தப் பொதுமைப்பண்பை யுணராத மக்களே வேறு

பல சிந்தனைகட்கு அடிமையாகி ஆண்டவனுடைய அருளைப் பெறமுடியாமல் பிறவியைப் பாழாக்கி விடுகின்றனர். இன்னும் இவர்கள் கடவுளையும் பலவாகக் கருதிப் பலப்பல பெயரிட்டு வழிபடுகின்றனர்; ஒவ்வொரு உயிரிலும் இறைவனிருக்கிறான் என்ற உண்மையைத் தெளிந்துகொள்ள முடியாமல் கடவுளின் திருமுன்னே கோவிலிலே ஆடு, பன்றி, கோழி, கடா முதலிய உயிர்களைப் பலியிட்டுத் தீவினைப் பழியை ஈட்டு கின்றார்கள். பெற்ற குழந்தையைப் பெற்றோர்கள் எங்கே யாவது கொன்று உண்பார்களா? அனைத்துயிர்களையும் படைத்த ஆண்டவன் சில உயிர்களைக் கொன்று பலி யூட்டச் செய்ய விரும்புவானா? இக் கொடுமையினைப் பகுத்தறிவுபெற்ற மனிதப்பிறவி உணர்ந்து திருந்த வேண்டாவா?

கோவிலென்பதும் அருளின் இருப்பிடமன்றோ! அங்கே இரக்கத்தை வேண்டுகின்ற இறைவன் ஆருயிர் களின் இடுக்கண்ணை விரும்புவானோ? இவ் வுண்மை மறந்த சிலர் கோவிலையே வெங்கொடுமைச் சாக்காட்டிட மாக ஆக்குகின்றனரே! இவர்கள் பிற உயிரைக் கொல்லும்போது ஆண்டவனின் கண்களினின்று கண்ணீர் வழிகிறதை இவர்கள் காணமாட்டார்கள். காண் பதற்குத்தான் இவர்கட்கு அருட்கண் இல்லையே! நாகரிகம் பெறாத காலத்தில் மூடப்பழக்கத்தால் செய்த இந்த உயிர்ப் பலிக் கொடுமையை இந்த நாகரிகம் பெற்ற காலத்திலும் செய்தால் மக்களை என்னவென்று சொல்வது? அதனாலேதான் இரக்கமே வடிவான வடலூர்ப்பெருமான் அக் காட்சியைக் கண்ட காலத்தி லெல்லாம் உள்ளமும் அறிவும் செத்து நடுங்கியிருக்

கிறார்கள்; மக்கள் அருளைப் பெறாமல் அழிந்துபோவதைக் கண்டு அழுதிருக்கிறார்கள்.

ஆகவே, அன்பர்களே! அருளும் கலையும் பிணைந்த தெய்வக் கோவில்களிலே உயிர்ப்பலி கூடாதென்ற இரக்க நெறியை எல்லாரும் கைக்கொண்டு உலகிற்கும் உணர்த்தவேண்டும். அப்போதே அருளாட்சி யேற்படும்! ஒரு பக்கம் வேற்றுமையுணர்வும் மறுபக்கம் போலி வழிபாடுமிருந்தால் யாருமே இறைவனருளைப் பெற முடியாது! வடலூர்ப் பெருந்தகை கண்ட அக் கொடிய காட்சிப் பாடலைப் பாடுகிறேன், கேளுங்கள்:

'நலிதரு சிறிய தெய்வமென்று ஐயோ!
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டேன்
புந்திநொந்து உளம்நடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்.'

அன்பர்களே! இந்தப் பாடல் அருளுள்ளம் கொண்ட யாரைத்தான் நடுங்கச் செய்யாது? ஆருயிர், இரக்கம், அருள், பெருஞ்சுடர், கோவில்—யாவுங் கலந்த வாழ்வே நிறைமனித வாழ்வென்று யாரும் நெஞ்சிற் கொள்ள வேண்டும்.

'கொல்லா விரதம் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்வதுஎன் னிச்சை பராபரமே'

என்ற அருள்முனிவர் தாயுமானவரின் ஆருயிர்ப்பாடலைச் சொல்லிமுடிக்கிறேன். வணக்கம்; நன்றி!"

வல்லநாட்டுச் சித்தரின் இந்த உரை, ஆயிரக் கணக்கான மக்களுக்கு அமுதாகவும் மருந்தாகவும் பயன் பட்டது. எல்லாரும் அப் பெருமானிடம் நன்றிகூறி அருள்பெற்றுச் சென்றனர்.

வள்ளலாரடியான் மட்டும் மீள்வதற்கு மனமின்றிச் சித்தரின் அடிகளையே சூழ்ந்து நின்றான். அவனுடைய மனக்குறிப்பை யுணர்ந்துகொண்ட சித்தர்பெருமான் அவனைத் தமக்கு அடிமையாக ஆக்கிக்கொள்ள விரும்ப வில்லை. அதனால் மறுத்துக்கூறினாரேனும் அவனைப் பெருநெறி பரப்பும்,தொண்டனாக ஆக்கி அருள்புரிந்தார்.

விடைபெறப்போகும் அவன் செய்தற்கு அரிய செய்யும் சித்தரிடம் ஒன்றைமட்டும் வேண்டிக் கொண்டான்:

"சித்தர் பெருமானே! தங்கள் திருமுன்னிருந்து பணிபுரியும் பேறு அடியேனுக்கு வாய்க்காவிடினும் தாங்கள் அடிக்கடி என் திருப்பெருந்துறை வட்டத்திற்கும் வந்து அருட்பெருஞ்சுடர் விளக்கேற்றி ஆருயிர்க்கு வாழ் வொளி ஊட்டவேண்டும். வணக்கம்."

இங்ஙனம் கூறி அருள்விடைபெற்றுக்கொண்ட அவன் உயிரிலே ஒரு புத்தொளி பாயப் பெற்றவனாய் நண்பன் அன்பரசனோடு இல்லத்திற்கு மீண்டான்.

அன்றிரவெல்லாம் வள்ளலாரின் அருட்பெருங் கொள்கைக்குள்ள வலிமையைப்பற்றியும் அவருடைய இறவாத பெருவாழ்வு வல்லநாட்டுச் சித்தரின் அருட் செயலாக மிளிர்வதைப்பற்றியும் ஆழ்ந்து சிந்தித்தான். இனி, உலகில் சன்மார்க்கப் பொதுநெறி மலர்ந்து

நீண்ட பெருங்காலத்திற்கு அன்புப்பாலம் அமையுமென்ற நம்பிக்கையும் அவனுக்கு ஏற்பட்டது. மனக்கவலையும் குறைந்தது.

மறுநாட் காலை; கிழக்கு வெளுத்தது, அவனுள்ளத்தைப்போல. உள்ளத்திலே ஒட்டிவந்த சிறுமாசும் மாய்ந்தது; பொதுவாழ்வுக்குச் சன்மார்க்கக் கதிரவன் தோன்றி அவனை அழைத்துச் சென்றான். பெருந்துறையை யடைந்த அவன் அருட்பெருஞ்சுடராம் திருவிளக்குத் தூணை யமைத்து அனைவருக்கும் உள்ளொளி கொடுக்கும் பணியிலே ஈடுபட்டான்!

கழக வெளியீடு : க௬௬௯

பதிப்பாளர் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,

தலைமை நிலையம் :

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.
மதுரை-1. கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1.
திருச்சி-2.

விலை ரூ. 2 - 00

அப்பர் அச்சகம், சென்னை-1.